# ரஷ்யாவின் ஆளில்லாக் கலம் சந்திரனில் இறங்கியது

Registered as a News Paper in Ceylon  விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 222
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 5 றஜபு 19 திங்கட்கிழமை (21-9-70)







பொஸ்டன், செப் 20
சோவியத்யூனியன் அனுப்பிய 'லூனா-16' என்னும் ஆளில்லாத விண்வெளிக் கலம் சந்திரனில் மெதுவாக தரையிறங்கியிருக்கிறது. இலங்கை நேரப்படி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-36க்கும் 9 40க்கு மிடையில் இந்த விண்வெளிக்கலம் சந்திரனில் மெதுவாக இறங்கியிருப்பதாக பொஸ்டன் விண்வெளி அவதான நிலையத்தில் பதிவான சமிக்ஞைகளிலிருந்து அறிய முடிந்தது.

இம்மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை இந்த ஆளில்லாத விண்வெளிக்கலத்தை சோவியத் யூனியன் சந்திரனுக்கு அனுப்பிவைத்திருந்தது.

இதேசமயம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் சந்திரனில் இறங்கவிருக்கும் அமெரிக்க விண்வெளிவீரர்கள் மைக்கேலும் அலென் ஷெப்பர்ட் ஜூனியரும் தீவிர பயிற்சி பெற்றுவருகின்றனர். இவர்கள் சந்திரனில் இறங்கி அதுபற்றி ஆராய்ந்து திரும்பும்போது றேடியோ சமிக்ஞைகளைக் கொண்டு வெடிக்கவைக்கும் கருவியொன்றையும் அங்கு நாட்டிவிட்டுத் திரும்புவார்களாம்.

இதன்மூலம் சந்திரனின் அமைப்பு, தரை நிலைமை, அதிர்ச்சி ஆகியவை பற்றியும் அங்கு தண்ணீர் இருக்கிறதா என்பதைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு வழிபிறக்கலாம் என்றும் அமெரிக்கர் எதிர்பார்க்கின்றனர்.

## ஆஸ்பத்திரியில் வெளவால் தண்ணீர்

அம்பன், ஞாயிறு
மாம்பழ வெளவால் என்றழைக்கப்படும் வெளவால்கள் அதிகமாகக் குடிகொண்டிருக்கும் கிணறு ஒன்றிலிருந்தே அம்பன் அரசினர் வைத்தியசாலையில் உள்ள நோயாளிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறதாம்.

வருடக்கணக்கில் இறைக்கப்படாத இக்கிணற்றில் வெளவால்கள் குடிகொண்டிருப்பதால் அவற்றின் மலசலம் கலந்த நீரையே தாங்கள் உட்கொள்ள வேண்டியிருப்பதாக நோயாளிகள் புகார் கூறுகின்றனர்.

## ரெஜினா விடுதலை

சென்னை, செப், 20
நகைச்சுவை நடிகர் நாகேஷின் மைத்துனர் செல்வராஜ் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நான்கு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த திருமதி ரெஜினா விடுதலை செய்யப்பட்டார்.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அப்பீல் விசாரணையின்போது ரெஜினாவை நீதியரசர் விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்
அரசியல் நிர்ணயசபைக்கு அனுப்பவிருக்கும் மகஜர் சம்பந்தமாக ஆலோசிக்குமுகமாக யாழ் மக்கள் மன்ற ஆதரவில் இன்று பிற்பகல் மலேயாகபே மேல்மாடியில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

# பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகம் 'பொலிடெக்னிக்' கல்லூரியாகும்

## தூதுக் குழுவிடம் தபால் அமைச்சர் தகவல்

உடுப்பிட்டி, ஞாயிறு
"பலாலியிலுள்ள தமிழ்க் கனிட்ட பல்கலைக் கழகம் எக்காரணம் கொண்டும் நிறுத்தப்பட மாட்டாது இக்கனிஷ்ட பல்கலைக்கழகம் தொடர்ந்து 'பொலிரெக்னிக்' கல்லூரியாக இயங்கும் இதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்து வருகின்றேன்".

இவ்வாறு தபால் தந்தியமைச்சர் திரு. செ. குமாரசூரியர் தம்மைப் பேட்டிகண்ட வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கத் தூதுக்குழுவிடம் உறுதியளித்தார்.

கிளிநொச்சி எம் பி திரு. வி, ஆனந்தசங்கரி தலைமையில் சென்ற இத்தூதுக்குழுவில் திருவாளர்கள் அ. தேவச்சந்திரன் (வடமராட்சி வர்த்தக மாணவர்



...யைப் பூரணமாகப் படித்து முடிப்பதற்காகவே யாகும் அத்துடன் ஆங்கிலப்பிரிவை ஒரு 'பொலி ரெக்னிக்' கல்லூரியில் வைத்துப் போதிப்பதற்கு அது பொதுத் தொழில்நுட்பப் பிரிவு அல்லவென்றும் அமைச்சர் திரு குமாரசூரியர் சுட்டிக்காட்டினார். ஆங்கிலப் பிரிவு மாணவர்களை ஆசிரியபயிற்சிக்கல்லூரிக்கு மாற்றி...

## துணுக்காயில் இன்றும் நாளையும்

## கலைவிழாவும் கைப்பணிக் காட்சியும்

யாழ்ப்பாணம், திங்கள்
துணுக்காய்-வவுனிக்குளம் பிரதேசக் கலைமன்றம் இன்றும் நாளையும் இலக்கிய-கலைவிழாவும், விவசாய - கைப்பணிப் பொருட் காட்சியும் நடத்துகின்றது. வவுனிக்குளம் 3-ம் யூனிட் மல்லாவி மகாவித்தியாலயத்தில் விழா இன்றுமாலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகும். தொகுதி எம். பி திரு. வி, ஆனந்தசங்கரி தேசியக்கொடியை ஏற்றி வைப்பார்.

### இன்று

இன்றைய நிகழ்ச்சிகள் துணுக்காய் கிராமசபைத் தலைவர் திரு. வி. கந்தசாமி தலைமையில் நடைபெறும். மன்றத் தலைவரும், பகுதிக்...

...யும், முருங்கன் முத்தமிழ் கலா நாடகமன்றத்தினரின் வில்லிசையும், இசைமணி வ. செல்லத்துரை கோஷ்டியின் இசை நிகழ்ச்சியும் வவுனிக்குளம் உதய சூரியன் நாடக மன்றத்தின் 'சாக்ரட்டீஸ்', கண்டல்வெளி ச. ச. நிலையத்தின் 'லோங்ஸ் மாப்பிள்ளை' முதலிய நாடகங்களும் இன்றைய நிகழ்ச்சியில் இடம்பெறும்.

### நாளை

மன்னார் அரசாங்க அதிபர் திரு. ச கதிர்காமநாதன் தலைமையில் 2-ம் நாள் விழா நடைபெறும், மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன் தேசியக்கொடியை ஏற்றுவார்...

## சுதந்திரத்துக்காக தீக்குளித்தான்

ஏதென்ஸ், செப். 20
கிரேக்கத்தில் இராணுவ ஆட்சியை எதிர்த்து தனக்குத்தானே தீமூட்டிக் கொண்ட கிரேக்க இளைஞன் நேற்றிரவு மரணமானான் தீமூட்டிக் கொண்ட இளைஞனின் உயிரைக் காப்பாற்றுவதற்கு வீதியில் சென்றவர்கள் முயற்சி செய்தபொழுது 'சுதந்திரகிரேக்கம்நீடுவாழ்க' என்று கோஷமிட்டான் அந்த இளைஞன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான் ஆயினும் உயிர் பிழைக்கவில்லை.

நிறுவுவதில் பிரச்னைகள் ஏதும். இருக்குமானால் கொக்குவில் கனிஷ்ட தொழில்...

கூப்பன் அரிசி

# வியாபாரிகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நிகழ்ச்சிகள் துணுக்காய் கிராமசபைத் தலைவர் திரு. வி. கந்தசாமி தலைமையில் நடைபெறும். மன்றத் தலைவரும், பகுதிக் காரியாதிகாரியுமான திரு. த. மார்க்கண்டு வரவேற்புரை நிகழ்த்துவார். வித்துவான் மு. சபாரத்தினம், திரு. ஏ. பி. செல்லையா, கவிஞர் அம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவர்,

மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. பொ. மாணிக்கவாசகர் விவசாயப் பொருட்காட்சியையும், மாவட்ட கிராமஅபிவிருத்தி அதிகாரி திரு. ஏ. எல், இராசரத்தினம் கைப் பணிப் பொருட்காட்சியையும் திறந்துவைப்பர்.

தவில் வித்துவான்கள் கே. கணேசன். என், ஆர். சின்னராசா ஆகியோரின் கச்சேரி

திரு. ச. கதிர்காமநாதன் தலைமையில் 2-ம் நாள் விழா நடைபெறும், மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன்தேசியக்கொடியை ஏற்றுவார் பனங்காமம் கி. ச. தலைவர் திரு. கு. தம்பையா வரவேற்புரை நிகழ்த்துவார். 'புதுமைலோலன்', திரு. நா. க. சண்முகநாதபிள்ளை, வித்துவான் க. கணபதிப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

தவில் வித்துவான்அளவை பாலகிருஷ்ணன் கோஷ்டியினரின் கச்சேரியும், செல்வி பவானி பாலசுப்பிரமணியத்தின் பரதநாட்டியமும், திரு. பொன் சுந்தரலிங்கம்கோஷ்டியின் இசைக்கச்சேரியும். மல்லாவி மறுமலர்ச்சி மன்றம். ஜீவா நாடகமன்றம், கோண்டாவில்ஸ்ரீவாகீஸ்வர் கலையக நாடக மன்றம் அளிக்கும் நாடகங்கள் ஆகியன விழாவில் இடம்பெறும்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

---

கிளிநொச்சி எம் பி திரு. வி, ஆனந்தசங்கரி தலைமையில் சென்ற இத்தூதுக்குழுவில் திருவாளர்கள் அ. தேவச்சந்திரன் (வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கச்செயலாளர்) சதா நடேசன். கே கனகரத்தினம் ஆகியோர் அங்கம் வகித்தனர்

இத்தூதுக்குழு அமைச்சரிடம் கனிஷ்ட பல்கலைக் கழகம் வடக்கிலுள்ள தமிழ் மணவர்களின் நலன்கருதி 'பொலிரெக்னிக்' கல்லூரியாக இயங்க வேண்டுமென்ற கோரிக்கையைச் சமர்ப்பித்தது.



கல்விப் பிரிவுகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாதென்றும் மாணவர் தொடர்ந்து தமது கல்வியைப் பெறவாய்ப்புச் செய்து கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தாராம்.

"கனிட்ட பல்கலைக்கழக ஆங்கிலப் பிரிவை ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு மாற்றியதின் காரணம் அவர்கள் தங்களுடைய பயிற்சி தொழில்நுட்பப் பிரிவு அல்லவென்றும் அமைச்சர் திரு. குமாரசூரியர் சுட்டிக்காட்டினார். ஆங்கிலப் பிரிவு மாணவர்களை ஆசிரியபயிற்சிக்கல்லூரிக்கு மாற்றியதற்கு ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையும் ஒருமுக்கிய காரணம் என்றும் அவர் கூறினார்.

"இம்மாணவர்கள்தங்கள் ஆசிரிய பயிற்சிக் காலத்தில் எவ்வித சம்பள சலுகையையும் பெற வாய்ப்பு இல்லை பயிற்சி முடிந்து வெளியேறியதும் ஆசிரியர்களாக 4 வருடகாலம் பணிபுரிய வேண்டும் ஆனால் இவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதுபோல்வழங்கப்படும் ஏனைய பிரிவுமாணவர்களுக்குக்எகாரணத்தைக் கொண்டும் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் இடம் கொடுக்கப்படமாட்டாதென்றும் அமைச்சர் கூறினாராம்.

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தில்உள்ள வசதிகளைப் போன்ற கட்டிடங்களை யாழ்ப்பாணத்தில் வேறெங்கும் பெறமுடியாதிருப்பதால், இந்தக்கட்டிடங்களிலேயே 'பொலிரெக்னிக்'கை ஆரம்பிக்கவேண்டும் என்று தூதுக்குழு தபால் அமைச்சரிடம் வற்புறுத்தியது.

திரு. குமாரசூரியர் இதற்குப்பதிலளிக்கையில் 'நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இதனை நிறுவலாம் என்று அரசாங்கம் ஆலோசித்துவருவதாகவும், அங்கு உயிர் பிழைக்கவில்லை.

நிறுவுவதில் பிரச்னைகள் ஏதும் இருக்குமானால் கொக்குவில் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியைச் சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியாகவோ அல்லது பொலி தொழில் நுட்பக் கல்லூரியாகவோ மாற்றிப் பிரஸ்தாப மாணவர்களுக்கு வசதிகள்செய்து கொடுக்கப்படும் என்றும் கூறினார்.

கனிஷ்ட பல்கலைக் கழகத்திலிருக்கும் விரிவுரையாளர்களுக்கும் இவ்வித மாற்றம் நடைபெறும் என்றும் அமைச்சர் சொன்னாராம்,

இத்தூது கோஷ்டி சிரேஷ்ட உதவிக் கல்வி அதிகாரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியபோது அவ்வதிகாரியும் இத்தகவலையே தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகம், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குக் கொடுக்கப்படப் போவதாக வெளிவந்த செய்திகள் உண்மையானவை என்றும் இவ் ஆண்டு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பற்றாக்குறையாக இருப்பதால் தற்போதய கனிஷ்ட பல்கலைக் கழகக் கட்டிடங்களில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்களை மாற்றவிருப்பதாகவும் 'பொலிரெக்னிக்' யாழ்ப்பாணத்திலேயே அமையும் என்றும் அந்தஅதிகாரி கூறியதாகவும் தெரிகிறது.

---

கூப்பன் அரிசி

# வியாபாரிகளுக்கு ஒரு வாரம் கடனுதவி

யாழ்ப்பாணம், திங்கள்

பங்கீட்டு அரிசி விநியோகஸ்தர்களின் நன்மையைக் கருதி முதல் ஒரு வாரகால அரிசியை கடனாக வழங்குவதற்கு கூட்டுறவு இலாகா முடிவுசெய்துள்ளது. விலை கொடுத்துவாங்கும் அரிசியைக் கொள்வனவு செய்வதில் வியாபாரிகளுக்குக் கஷ்டம் ஏற்படாமலிருப்பதற்காகவே இவ்வித சலுகையை அறிவித்துள்ளது.

கூட்டுறவு ஆக்க ஆணையாளர் அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் இம் மாதம் 26-ம் திகதி தொடக்கம் வழங்கப்படவிருக்கும் இரண்டுகொத்து அரிசியில், பணம் கொடுத்துவாங்கும் அரிசியை விரும்பினால் கடனுக்கு வழங்குவதற்கு கூட்டுறவு இலாகா இணங்கியுள்ளதாக அறிவித்துள்ளார்.

(அம்: நிரு.)

---

விமானநிலையத்துக்கு

## பண்டாரநாயக்க பெயர் வைக்க கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

கட்டுநாயக விமான நிலையத்துக்கு பண்டாரநாயகா சர்வதேச விமானநிலையம் என்று பெயரிடப்பட வேண்டுமென டம்பரதே ஸ்ரீ சிவாலி மகாதேரோ என்பவர் கேட்டுள்ளார்.

இப் புதுப்பெயரை இம் மாதம் 26-ம் திகதி நடக்கவிருக்கும் பண்டாரநாயகா நினைவுதினத்தில் சூட்ட வேண்டுமென அவர் கேட்டுள்ளதாக அறியப்படுகிறது.

---

# 'மொழி, இன பாகுபாடுகளுக்கு புறம்பானது தொழிலாளர் பிரச்னை

## கச்சேரிக கூட்டத்தில் உதவி மந்திரி தெரிவித்த கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

'மொழி, இனம் என்ற பாகுபாடுகளுக்கு அப்பால் தொழிலாளர்களின் பிரச்னைகள் யாவருக்கும் ஒன்றாகவுள்ளது. இதனைத் தீர்த்து வைப்பதைகய இன்றைய அரசாங்கம் தனது இலட்சியமாகக் கொண்டுள்ளது. எப்போதும் அது தொழிலாளர்களின் பக்கமாகவே நின்று செயல்படும்.'

இவ்வாறு வடபகுதிக்கு விஜயம்செய்த உதவித் தொழிலமைச்சர் திரு. சிறிசேன நேற்று கச்சேரி செயலகக் கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு புதிய மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என் ஐ. விமல் அமரசேகரா தலைமைவகித்தார்.

உதவியமைச்சர் தொடர்ந்து பேசுகையில்குறிப்பிட்டதாவது'

எத்தகைய பாகுபாடுமின்றி செயல்படும் அரசாங்கம் எந்த மூலையில்வாழுகின்ற தொழிலாளியையும் கூர்ந்து கவனிக்கும் அவர் தம் பிரச்னைகளைத் தீர்ப்பது மட்டுமல்லாமல் அவர் எக்காலத்திலும் சுபிட்சமாக வாழ ஏற்பாடு செய்யும். பசு எந்த நிறமுடையதானாலும் அதன் பால் வெண்மை நிறமுடையதே. அதுபோல எந்த இனத்தவரானாலும் தொழிலாளர் தம் பிரச்னை ஒன்றேயாகும். அந்தப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதுதான் நமது கடமையாகும்

கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிசெய்தபோதிலும் தொழிலாளர் தம் பிரச்னைகளை அதுதீர்த்து வைக்கவில்லை.

தொழிலாளர்களின் விமோசனத்துக்காக நமது அரசாங்கம் தன்னாலானதை செய்யும்.

அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா பேசுகையில் இந்த நாட்டின் அரசாங்கம் தொழிலாளர்களிடத்தில் கொண்டுள்ள அக்கறைக்கு உதாரணமாக உதவி அமைச்சர் விளங்குகிறார் என்றார்.

திருவாளர்கள்: எம் சி சுப்பிரமணியம் எம் பி, ஏ விஸ்வநாதன் எம் எம் சி, வி பொன்னம்பலம், யாழ் நகரசபை உதவி முதல்வர் திரு ஏ துரைராசசிங்கம் உதவித் தொழில் ஆணையாளர் முதலியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

---

## அமைதியான வரவேற்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

சிகரங்கள், தோரணங்கள் எதுவும் அமைத்து ஆடம்பரப்படுத்தாமல் உதவி அமைச்சர் ஸ்ரீ சேனா இன்று பலாலி விமானநிலையத்தில் வரவேற்கப்பட்டார்.

இந்த வைபவத்தில் தெல்லிப்பழை கிராமசபைத்தலைவர் திரு. சிதம்பரநாதன், திரு. வி. பொன்னம்பலம், திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. ஏ. விஸ்வநாதன், திரு. அல்பிரட் துரையப்பா ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

# ஓடும் பஸ்ஸில் யுவதியிடம் சேஷ்டை

## சாரதி, கண்டக்டர் கைது

கொழும்பு, ஞாயிறு

கடந்த இரவு மதவாச்சியிலிருந்து வவனியாவுக்குச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த இளம் பெண்ணுடன் முறை தவறி நடந்து கொள்ள முயன்றதாக பஸ்ஸின் சாரதியும், கண்டக்டரும்பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்-

இதுசம்பந்தமாக அனுராதபுரம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் இன்று இளம் பெண்ணின் தாயார் ரண்மினிக்கா பின்வருமாறு கூறினார்.

'எனது மகள் நந்தாவதியும் வேறு இரண்டு பிள்ளைகளும் மதவாச்சியில் இரவு பத்து மணியளவில் என்னுடன் பஸ்ஸில் ஏறினர். ஈறற் பெரியகுளத்துக்குப் போய்க் கொண்டிருந்தோம் வேறு பிரயாணிகள் பஸ்ஸில் இல்லை. வழியில் விளக்கை சாரதி அணைத்துவிட்டார். எனது மகளைக் கண்டக்டர் கடைசி ஆசனத்துக்குக் கொண்டு சென்றார். அவள் கூச்சலிட்டிட்டு, அவருடன் போராடுவது கேட்டது. இக்கூச்சல் வெளியிற் கேட்காதவாறு சாரதி அக்ஸிலேட்டரை அழுத்தி சத்தத்தை உண்டாக்கினார்

நந்தாவதி தன்னை விடுவித்துக்கொண்டு வேகமாக ஓடும் பஸ்ஸிலிருந்து வெளியில் குதித்தாள். என்ன நடந்ததென நான் வெளியில் வந்து பார்த்தபோது மகள் மூர்ச்சையற்றுக் கிடந்தார்.

மருத்துவ சோதனையில் பெண்ணின் தலையில் பலத்த காயமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(சி பி ஏ)

---

# காரைதீவு கிராமசபை இரண்டாகப்பிரிந்தது

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டைத்தொகுதியிலுள்ள காரைநகர் கிராமசபை வருகிற ஆண்டு முதல் இரு கிராம சபைகளாகப் பிரிக்கப்படவிருக்கிறது. காரைநகர் தெற்கு, காரைநகர் வடக்கு கிராம சபைகளாக வருகிற ஜனவரி மாதம் முதல் இது இயங்கும்.

காரைநகர் தெற்கு கிராம சபை 11 வட்டாரங்களையும், காரைநகர் வடக்கு 12 வட்டாரங்களையும் கொண்டதாக இருக்கும்.

காரைநகர் தெற்கு கிராம சபையின் புதிய வட்டாரங்கள் விபரம் வருமாறு: 1 பிட்டிப்போலை, 2 ஊரி. 3 பாலவோடை, 4 தோப்புக்காடு, 5 துறைமுகம், 6 விலானை. 7 பொன்னாவளை, 8 சத்திரந்தையும் காரைப்பிட்டியந்தனையும், 9 பாலக்காடு, 10 வியாவில், 11கருங்காலி.

காரைநகர் வடக்கு கிராம சபையின் புதிய வட்டாரங்கள் விபரம்: 1 வேதரடைப்பு 2 ரூத்தலடி, 3 விக்காவில், 4 சிதம்பராமூர்த்தி கோவிலடி. 5 நீலிப்பந்தனை, 6 மாப்பாணஊரி, 7 வலந்தலை, 8 வேம்படி, 9 தங்கோடை. 10 பயறிக்கூடல், 11 மந்திபுலம், 12 அயில்.

## சினிமாவில் சந்நிதி திருவிழா

வல்வெட்டித்துறை, திங்கள்

கட்டிடக்கலைஞர் திரு. வி எஸ், துரைராசா பிலிம்சாரின் "ஆசைக் கோபுரம்" என்னும் படத்திற்காக செல்வச்சந்நிதி கோவிலில் இம்முறை நடந்தேறிய சப்பறம், தேர், தீர்த்த திருவிழாக்காட்சிகள் படம் எடுக்கப்பட்டன.

---

# ஜோர்டானில் ஆக்கிரமிப்பு மன்னர் குற்றச்சாட்டை சிரியா மறுக்கிறது

டமாஸ்கஸ், செப் 20,

ஜோர்டானில் சிரிய படைகள் புகுந்திருப்பதாகவும் ஜோர்டானின் துருப்புகளுக்கும் சிரியா துருப்புகளுக்குமிடையில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் ஜோர்டான் தெரிவித்த குற்றச்சாட்டுகளை வெறும் கட்டுக்கதையென்று சிரியா ஜனாதிபதி வருணித்தார், தொழிலாளர் கூட்டமொன்றில் பேசகையில் சிரியா ஜனாதிபதி இப்படிக் கூறினார்.

ஆனால், சிரியா படைகள் ஜோர்டானுக்குள் துரோகத்தனமாகப் புகுந்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக ஜோர்டான் மன்னர் அம்மான் ரேடியோவில் இன்று அறிவித்திருக்கிறார்,

இதேசமயம் ஜோர்டானில் அரச படைகளுக்கும் அரபுக கொமாண்டோக்கும் கடுமையான மோதல்கள் நடந்துகொண்டிருப்பதாக செய்திகள் கூறின. இந்தச் சந்தர்ப்பத்தில் இஸ்ரேல் படைகளும் ஜோர்டானுக்குள் தலையிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

......

செகுவேரா

## மாற்று நடவடிக்கை?

கொழும்பு, ஞாயிறு

'பொலிசார் நம்மை நசுக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மாற்று நடவடிக்கையை நாம் எடுக்கவேண்டும்''

இவ்வாறு ஜனதா விமுக்திக பெரமுனே (சேகுவேரா) செயலாளர் திரு ரோகண விஜயவீர இன்று பொறளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

நாம் இந்த நாட்டில் கலப்பில்லாத சோசலிசத்தை அமைக்க முயல்கின்றோம் என்று அவர்குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

G. C. E. சாதாரண வகுப்பிற்குரிய விரைவு மீட்டற் பயிற்சி-தாயகணிதம்-1. 5 வருட வினுக்களும் செய்கை முறைகளும். 15 மாதிரி விண்ணப்பப் பத்திரங்களும் விடைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன. சுன்னுகம் தனலக்குமி புத்தகசாலையிலும் ஏனைய புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் 2960

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 21—9—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு6-25இசைப்பயிற்சி, 6-30 மகளிர்அரங்கம்,7-00 இந்திய கிராமிய கீதங்கள், 7-30வயலின், 8-00முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

......

## 33பேர் கைது

கோட்டை, ஞாயிறு

ஹன்வெலையிலுள்ள ஹல்ப்பே தோட்டத்தில் ஸ்ரீ.ல.சு.கட்சி அங்கத்தவர்களுக்கும், பீகிங் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களுக்குமிடையில் நிகழ்ந்த கைகலப்பைத் தொடர்ந்து 33பேரை பொலிசார் கைதுசெய்துள்ளனர். இத்தோட்டத்தை ஆயுதம் தாங்கிய பொலிசார் தற்போது காவல் செய்துவருகின்றனர்.


### தேவை

கமிஷன் அடிப்படையில் வேலைசெய்ய ஆண்பிரதிநிதிகள் தேவை.

நேரில்வரவும்.

Director
M. S. S. T.
Sangarapillai Building.


## சுங்க விற்பனை

ஒரு இயந்திர வள்ளம் "லிஸ்டர்" பிளாக்ஸரோன் 3 சிலிண்டர் மிகவும் திறமையான நிலையில் உள்ளது. இவ்வள்ளம் 24-9-70-ம் திகதி காலை 11 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஊர்காவற்றுறை சுங்கக் காரியாலயத்தில் விற்கப்படும். கேட்ட விலையில் 25 வீதம் வைப்புப்பணம் ஏல முடிவில் கட்டப்படல்வேண்டும். ஏலத் திகதியில் இருந்து 15 நாள் தவணையில் மீதிப் பணம் செலுத்தி வள்ளத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

S. M. J. சேனுரத்ன,
யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

மா. ம. சுங்கம்,
யாழ்ப்பாணம்,
19-9-70. 2465

உடுப்பிட்டி, ஞாயிறு

அல்வாய் தெற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளைத் தலைவராகத் திரு. வி ஸ்ரீபால கணேசமூர்த்தியும், காரியதரிசியாகத் திரு. சி. கனகசபையும் தெரிவுசெய்யப்பட்டனர்.

......

## 8 அடி 2 அங். பாய்ந்த 15வயதுச் சிறுவன்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அச்சுவேலி பெண்ஹாம் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் திரு சி. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. நல்லொழுக்க விசாரணைச் சிறுவர் பரிபாலன சேவை ஆணையாளர் திரு. டபிள்யு. ஆர். பி. இராஜகருணு பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கினுர்.

அச்சுவேலி சென். திரேசா மாணவிகள் பாண்வாத்தியம் வாசித்தனர். முதலாவது இடத்தைப் பெற்ற சத்தி இல்லம் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் வெற்றிக் கேடயத்தை பெற்றனர். கலால் இலாகாவினரும் வெற்றிக் கேடயம் ஒன்றை அன்பளிப்புச் செய்தனர்.

என். புனிதராஜா மேற்பிரிவு சாம்பியனுகவும், ஏ. செல்வம், எஸ். சுந்தரராஜன் மத்திய பிரிவு சாம்பியனுகவும் தெரிவு செய்யப்பட்டனர். எஸ். செல்வானந்தன் (15 வயது) கோலூன்றிப் பாய்வதில் 8 அடி

## ஆண்டு நிறைவு விழா

நெல்லியடி, ஞாயிறு

இன்பருட்டி கிராமமுன்னேற்றச் சங்கசன சமூக நிலைய 15 வது நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் பருத்தித் துறைக் காரியாதிகாரி திரு. மு தம்பிமுத்து தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினர்களாக உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு க. ஜெயக்கொடியும், பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினமும் கலந்து கொண்டார்கள் கடலில் நீச்சல் போட்டி, இயந்திரப் படகு, கட்டுமரம் ஓட்டப் போட்டி விநோத உடைப் போட்டி முதலியன விசேஷ நிகழ்ச்சிகளாக நடைபெற்றன.

......

## வெளிநாடுகளில் தொழில்தேடும் ஆசிரியர்கள்

பருத்தித்துறை, ஞாயிறு

இவ்வாண்டு இறுதியுடன் ஒய்வுபெறும் பலபட்டதாரி ஆசிரியர்கள் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தமது கல்வித் தகைமை அனுபவம் ஆகியவற்றை வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு தெரிவித்து சேவை நிபந்தனைகள் சம்பளவிபரம் ஆகியவற்றின் விபரங்களைத் தெரியப் படுத்துமாறு இவர்கள் கேட்டுள்ளனர்.

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 5-ம்திகதி
(21-9-70)

மேஷம்: எவரிடத்திலும் அதிக நம்பிக்கை வைக்க வேண்டாம். கடல் பிரயாணத்தைத் தவிர்த்துக் கொள்வது நன்று.

ரிஷபம்: கண் துடைப்பு வேலை நடக்கும். வீட்டில் சிறிய பூசல் தலைதூக்கும். ஆணவத்தை அடக்கவும்

மிதுனம்: இனியவார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். இறையருளும் உண்டு.

கடகம்: அதிக ஆசை வைப்பதின்மூலம் அவதிப் படுவீர்கள். அவசர முடிவைத் தவிர்க்கவும்.

சிம்மம்: தாய்வழித் தனவரவுக்கு இடமுண்டு. கல்வித்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும். இன்று நல்ல தினம்.

கன்னி: காதலர்கள் வாழ்க்கையில் கனிவான

உதை பந்தாட்டம்

## உரும்பராய் இந்து கோஷ்டி முதல் பிரிவில் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்குமிடையில், யூனியன் மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதல் பிரிவில் உரும்பிராய் இந்து வெற்றி பெற்றது.

இரு கல்லூரிகளுக்குமிடையில் நடைபெற்ற 2-வது பிரிவில் யூனியன் கல்லூரி 2—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. எஸ். சிவலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்

இரு கல்லூரிகளின் முதல் பிரிவுகளுக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில் உரும்பிராய் இந்து 4—3 கோல்களால் வெற்றி பெற்றது. உரும்பிராய் இந்து வீரர்களான குணசிங்கம்-3, அரிச்சந்திரன்-1 ஆகியோர் கோல்களைப் போட்டனர். யூனியன் கல்லூரியின் வீரர் குமரகுரு சிறப்பாக விளையாடி மூன்று கோல்களையும் அடுத்தடுத்துப் போட்டார். இப்போட்டிக்கு திரு. கலீல் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். (தே. நி

"வெற்றி, தோல்வி

## விளையாட்டில்மட்டுமல்ல வாழ்க்கையிலும் உண்டு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

ஒரு ஊரைப்பிரிக்க வேண்டுமானுல் அந்த ஊரில் கூட்டுறவுச் சங்கக் கடைகளும், கிராமமுன்னேற்றச் சங்கங்களும் உண்டாக்க வேண்டுமென்று சொல்லுவார்கள் ஆனுல்இங்கு அந்த விதமான போக்குக்கு இடமில்லாமல் செயலாற்றி வருவதையிட்டு மிகவும் சந்தோஷப்படுகிறேன். இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் பருத்தித்துறை இன்பருட்டிகிராமமுன்னேற்றச் சங்க 15வது ஆண்டு விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினுர்.

பருத்தித்துறைக காரியாதிகாரி திரு. எம் தம்பிமுத்து தலைமையில் மின்னொளியில் நடந்த இப் போட்டியில் திரு. துரைரத்தினம் தொடர்ந்தும் பேசியதாவது

விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமல்ல எமதுவாழ்க்கையிலும் வெற்றி தோல்வி ஏற்படுவதுண்டு. இவற்றை எல்லாம் சமாளித்து நிதானமாக வாழப் பழகவேண்டும், விளையாட்டுப்போட்டி உடலுக்குஉறுதியைக் கொடுத்து மூளையை வளர்க்கிறது. அதன்மூலம் நாம் இப்போதிருக்கும் நிலை உணர்ந்து ஒற்றுமையாக வாழப்பழக வேண்டும்.

உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடியும் கலந்து கொண்டார். வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி துரைரத்தினம் பரிசில்கள் வழங்கினுர்.

......

கிராம சேவகர்

## வெற்றி

தாவடி, ஞாயிறு

தாவடி ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகத்திற்கும், இணுவில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத் திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டத்தில், தாவடி ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

## மட்டுவில் பாடசாலை மக்கள் கமிட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு அ. மி. த. கனிஷ்ட வித்தியாலய பெற்றூர் ஆசிரியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் அதிபர் திரு. செ. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற போது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பாடசாலைத் தேவையின் பொருட்டு அயலில் உள்ள காணிகள் சுவீகரிக்கப்பட வேண்டும். விஞ்ஞான, கணித பாட ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும் மின்சார இணைப்புக் கொடுபடவேண்டும்.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு செ வல்லிபுரம். உபதலைவர்: திரு இ குணரத்தினம், செயலர்: திரு வே துரைசாமி

## 'உறவுமட்டுமல்லஉரிமைக்கு குரலும் கொடுக்க வேண்டும்'

யாழ்ப்பாணம், திங்கள்

"உறவுக்குக் கைகொடுத்தால் மட்டும் போதாது. உரிமைக்குக் குரலும்கொடுக்க வேண்டும், உறவுக்காக உரிமைகளைப் பறிகொடுக்கக் கூடாது."

கம்யூனிஸ்ட் கட்சிக்காரியாலயத்தில் நடைபெற்ற மகாநாட்டில் வி. அரியரத்தினம்மேற்கண்டவாறு கூறினுர். மத்திய கமிட்டியின் இரகசிய அறிக்கை மீதுள்ள கருத்துக்களை பெறுவதற்கு வந்திருந்த திரு. அர்ஜேலிஸ் அப்புகாமியின் முன் நடந்த விவாதத்தில் அவர் மேலும் பேசியதாவது:

தமிழ்மக்கள் எம் மீது வைத்திருக்கும் நம்பிக்கை மேலும் வளரவேண்டுமானுல் அவர்களது ஜீவாதார உரிமைகள் எங்களால் பாதுகாக்கப்படும் என்ற உணர்ச்சி ஓங்கவேண்டும். பொருளாதார ஏற்றத்தாழ்வு மறைந்தால் இனமொழிப் பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்பதில் அதிகம்நம்பிக்கை வைக்க முடியாது தமிழர்கள் தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பட்டினி கிடக்கவும் தயாராக இருக்கிருர்களே ஒழிய பட்டினியிலிருந்து தப்புவதற்காக உரிமைகளைப் பறிகொடுக்கத் தயாராகவில்லை.

வெங்காய உற்பத்தியாளரின் பிரச்சினை, விதை உருளைக்கிழங்குப் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பொருளாதாரப் பிரச்னைகள் அந்தந்தத்துறையில் ஈடுபட்டோரை மட்டும் பாதிப்பவை இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சியுடன் தமிழர்களை இன்று பயமுறுத்திக் கொண்டிருக்கும் மனித உரிமைப்பிரச்னைகளையும் மனிதாபிமானத்துடன் அணுகும்படி அரசை தட்டிக்கேட்க வேண்டும். இந்தக் கடமையில் தவறிய காரணத்தினுல் தான் முடிசூடாமன்னர்களாக கொடிகட்டிப் பறந்தவர்கள் இன்று விலாசம் தெரியாதவர்களாக போய்விட்டார்கள் இன்று பகிரங்க இடங்களிலெல்லாம் முதல் உதை, இரண்டாவது உதை, மூன்ருவது உதை என்று சுவரொட்டிகள் அச்சடித்து ஒட்டியிருக்கிருர்கள். இச்சுவரொட்டிகளில் அரசாங்கம் தமிழருக்கு செய்யும் தீங்குகள் என்று சில சம்பவங்களைக் காட்டி பெரிதுபடுத்தி சோஷலிசத்தில் தமிழருக்குக் கிடைக்கும் உதைகள் கிடைக்குமா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. வரப்போகும் அரசியல் சட்டத்தில் தமிழினத்தின், மொழியின் நிலை என்ன என்பதுவரையறுக்கப்பட வேண்டும் மனித உரிமைகளைச் சரியாக வரையறுத்து பாதுகாப்புக் கொடுக்கத் தவறும் அரசியல் சட்டத்துக்கு நாம் ஆதரவு கொடுக்கக்கூடாது.

— —

## புதிய நிர்வாகிகள்

புத்தூர், ஞாயிறு

அச்சுவேலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: நா வேதாரணியம், உபதலைவர்: நா இரத்தினம், காரியதரிசி: இ யோகராசா, உபகாரியதரிசி த சிவஞானகிரிராசா, தனுதிகாரி: சி நடேசமூர்த்தி. 7பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப் பட்டது.

--

## மின்சாரம் வந்தபின்னும்...

உடுப்பிட்டி, ஞாயிறு

கரணவாய். நெல்லியடிப் பகுதிகளில்இரவில் 3 மணித்தியாலங்கள் தினமும் மின்சாரம் இல்லாமலிருப்பதால் பாவனையாளர்கள் அதிருப்தியும், கவலையும் அடைந்துள்ளர் தினசரி மாலை 7 மணியளவில் மின்சாரம் நின்று, விடுகின்றது இரவு பத்து மணியின் பின்னரே மீண்டும் மின்சார வெளிச்சம் வருகின்றது.

இதனுல் அதிக பணச் செலவில்தங்கள் வீடுகளுக்கு மின்சார இணைப்பையேற்படுத்தியுள்ளவர்கள் மின்சாரத்தின் பயனை அனுபவிக்க முடியாமல் மண்ணெண்ணை விளக்குகளையே நாட வேண்டியுள்ளது கடந்த சில தினங்களாக இப்பகுதியில் இச்சீர்கேடான நிலைமை தொடர்ந்து நிலவிவருகின்றது:

— —

## குடிதண்ணீர் தட்டுப்பாடு

பூநகரி, ஞாயிறு

ஆனையிறவை அடுதத நட்டுவன்கொட்டி கிராமத்தில் குடிதண்ணீர் இன்றி மக்கள்

## சந்தையை இடமாற்ற முயற்சி

அம்பன், ஞாயிறு

நாகர்கோவில் 8-ம் வட்டாரத்தில் உபதபாற் கந்தோருக்கு அருகாமையில் பாவிப்பாரற்றுக் கிடக்கும் சந்தையை நாகர்கோவில் வடக்கு, தாளையடி, எழுது மட்டுவாள், பருத்தித்துறை ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரதான நாற்சந்திக்கு அருகாமையில் மாற்றி அமைத்து பாவனைக்குரிய பொதுச் சந்தையாக்குவதற்கான ஆக்க வேலைகளை நாகர்கோவில் கிராம முன்னேற்றச் சங்கம் செய்து வருகின்றது.

சந்தை இடம்மாற்றப்படுவதற்கான அனுமதியை குடத்தனைக் கிராம சபை, நாகர்கோவில் கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு ஏற்கனவே வழங்கியுள்ளது.

— —

## திணைக்களங்களில் கலைமகள் விழா

வெள்ளவத்தை, ஞாயிறு

இலங்கை தபாற்தந்திப் போக்குவரத்துத் திணைக்கள இந்து ஊழியர்கழகம், இலங்கை மத்தியவங்கி இந்து ஊழியர் கழகம், உள்நாட்டு இறைவரித் திணைக்கள இந்து மன்றம், தொழிற் திணைக்கள இந்து ஊழியர் சங்கம், துறைமுக கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் போன்ற மன்றங்களும் தத்தமது திணைக்களகங்களின் சார்பில் கலைமகள் விழாவை சிறப்பாக நடாத்தவுள்ளன.

வெள்ளவத்தை சைவமங்கையர் கழகம் இவ்வருடம் கலைமகள் விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடவிருக்கிறது. கழகமண்டபத்தில் நடைபெறும் விழாவில் சைவமங்கையர் கழக மாணவிகளின் நடனம், நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளும்இடம்பெறும்.

......

## கைத்தொழில் அமைச்சரின் நியமனங்கள்

கோட்டை, ஞாயிறு

திரு. சோமபால குணதீரா கைத்தொழில் முன்னேற்றச் சபையின் தலைவராக நியமனம் பெற்றுள்ளார்.

இச் சபையின் நிரந்தரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேலைசெய்ய ஆண்பிரதி
நிதிகள் தேவை.
நேரில்வரவும்.
Director
M. S. S. T.
Sangarapillai Building.
95/3, Stanley Road,
Jaffna.

செல்வம், எஸ். சுந்தரரா ஜன் மத்திய பிரிவு சாம்பிய ஞகவும் தெரிவு செய்யப் பட்டனர். எஸ். செல்வான ந்தன் (15 வயது) கோலூன் றிப் பாய்வதில் 8 அடி 2 அங்) முதலிடத்தைப் பெற்ருர் என்பது குறிப்பிட த்தக்கது.

ராணி ஜெமினி — பத்மினி — நாகேஷ்
(யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் வாணிஸ்ரீ
தினசரி 3 காட்சிகள் நடித்த
எதிர்காலம்

வின்ஸர் ஜெமினிகணேசன் — ராஜஸ்ரீ
(யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர்-நிர்மலா- நாகேஷ்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பூவா தலையா

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ் நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
துலாபாரம்
(தமிழ்)
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

வரவுக்கு இடமுண்டு. கல் வித்துறையில் அதிக ஆர் வம் பிறக்கும். இன்று நல்ல தினம்.

கன்னி: காதலர்கள் வாழ்க்கையில் கனிவான சம்பவங்கள் இடம்பெறும். சுமுகமான தினம்.

துலாம்: துணிச்சலுடன் காரியங்களை சாதிப்பீர்கள் சிலருக்கு பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம்.

விருட்சிகம்: தாம்பத்திய வாழ்வில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. தொழில் துறையிலும் வெற்றியுண்டு

தனுசு: வெளியிடத் தொடர்புகள் மூலம் மந்த நிலை தென்படும். திடீர் பிரயாணமும் ஏற்படலாம்.

மகரம்: ஒளிமயமான எதிர்காலத்துக்கான அறிகுறிகள் இல்லத்திலும் இனிமை.

கும்பம்: இடமாற்றத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். உற்சாகமான தினம்.

மீனம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். தகுதியிலும் உயர்வுக்கு இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஜி ஆர். - சரோஜாதேவி நடித்த
திருடாதே

இரு தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில் 4 காட்சிகள்
பிரேம்நசீர் - ஷீலா - சாரதா நடித்த
துலாபாரம்
(மலையாளம்)

REGAL
Jaffna
Daily: 4-45, 7&9-45 p.m
Poya, Prepoya 4 Shows
JASON AND THE ARGONUTS

MANOHARA
Jaffna
Daily: 4-45, 7&9-45p.m.
Poya, Prepoya 4 Shows
Rayan O'Neal
in
THE BIG BOUNCE
(Color)

கொண்டார். வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி துரைரத்தினம் பரிசில்கள் வழங்கினர்.

......

## கிராம சேவகர் வேலைநீக்கம்

முசலி, ஞாயிறு

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முசலிக் காரியாதிகாரி பிரிவில் மேத்தன்வெளி கிராம சேவையாளராக கடமையாற்றிய திரு. எஸ். எஸ் ஒப்பார் கடந்த மாதம் 28ம் திகதி முதல் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு செ வல்லிபுரம், உபதலைவர்: திரு இ குணரத்தினம், செயலாளர்: திரு வே துரைசாமி, உபசெயலாளர்: திரு அ வெற்றிவேலு, தனாதிகாரி: திரு பே பாலசிங்கம். நிர்வாக உறுப்பினர்களாக 10 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். பாடசாலை மக்கள் கமிட்டி உறுப்பினராக ஐவர் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

களில் அரசாங்கம் தமிழருக்கு செய்யும் தீங்குகள் என்று சில சம்பவங்களைக் காட்டி பெரிதுபடுத்தி சோஷலிசத்தில் தமிழருக்குக் கிடைக்கும் உதைகள் இவை என எழுதியிருக்கிறா கள். இவற்றையெல்லாம் நாம் கவனத்தில் கொள்ளா விட்டால் நாம் கொடுக்க வேண்டிய கடைசி உதையை நாமே வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

திரு. பி.கே நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது' இந்த அரசாங்கத்திடம் மொழிவிஷயத்தில் நீதி

## தட்டுப்பாடு

பூநகரி, ஞாயிறு

ஆனையிறவை அடுத்த நட்டுவன்கொட்டி கிராமத்தில் குடிதண்ணீர் இன்றி மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர் இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி கிளிநொச்சி எம். பி. திரு. ஆனந்தசங்கரியையும், யாழ். அரசாங்க அதிபரையும் தந்தி மூலம் இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

......

## பிரசவ விடுதி இல்லாத குறை

முசலி, ஞாயிறு

தலைமன்னார் மாவட்ட வைத்தியசாலையில் பிரசவ விடுதி இல்லாததால் இப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் தங்கள் பிரசவத்திற்காக பலமைல் தொலைவிலுள்ள பிரசவ ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டிய நிலையில் இருக்கின்றனர்கள்.

இதுபற்றி சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

திரு. சோமபால குணதிரா கைத்தொழில் முன்னேற்றச் சபையின் தலைவராக நியமனம் பெற்றுள்ளார்.

இச்சபையின் நிரந்தரக் காரியதரிசியாக திரு. கென்றி குணதிலகாவும், வர்த்தக நிர்வாகஸ்தராக திரு. கே. பி. திஸநாயகாவும், பொருளாதார நிதி நிர்வாகஸ்தராக திரு. எச். ஆர். டி. சொய்சாவும் பொருளாதார ஆலோசகராக திரு. ஏ. எஸ். ஜயவர்த்தனாகவும் கைத்தொழில் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

— —

## சிரமதானம்

அம்பன், ஞாயிறு

வெற்றிலைக்கேணியிலிருந்து கட்டைக்காட்டுக்கு கடற்கரை வழியாகச் செல்லும் வீதியை அக்கிராம மக்கள் சிரமதான மூலம் வண. பிதா லைபோன் அடிகளார் தலைமையில் செய்து முடித்தனர்.

இன்று 2-30 காட்சியுடன் ஆரம்பம்!
தினசரி: 6-30, 10-00, பிரீ போயா, போயா 2-30 மெற்னி
வெஸ்லி சினிமா — மானிப்பாய்




தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே 100 படங்களுக்குமேல் தயாரித்து ஒரு சாதனையை நிலைநாட்டிய மொடர்ன் தியேட்டர்ஸாரின்சிறந்ததிரைக்காவியம்.
★ ஜெய்சங்கர் ★ நிர்மலா
* மனோகர் * வாணிஸ்ரீ * தேங்காய் சீனிவாசன் நடித்தது.
யாழ். நகரில் திரையிடப்படாத புதிய படம்.




மங்கல நீராடி
மகிழ்ச்சி பொங்க
மங்கைகள் பாவிப்பது
ரெமி
குடும்ப டால்க்
சருமத்தை மென்மையாகவும்
குளுமையாகவும்
வைத்திருக்க
ரெமி
வியாபார விபரங்களுக்கு:
அவ்ரா அன் கோ.,
19, செட்டியார் தெரு, கொழும்பு 11.
போன்: 27211

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையில் கடும் சண்டை; சிரியா மீது ஜோர்டான் குற்றச்சாட்டு

## அரபு உச்சி மகாநாட்டுக்கு நாஸரும் சம்மதம்

அம்மான், செப். 20 ஜோர்தான் சிரியா எல்லையில் நேற்று மீண்டும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த கொமாண்டோக்களுக்கும் ஜோர்டான் இராணுவத்துக்குமிடையில் கடும் சண்டை நடந்தது. டாங்கிகள், ரொக்கட்டுகளும் உபயோகிக்கப்பட்டன. ஜோர்டான் நிலைபற்றி ஆராய அரபு லீக் சபையின் கூட்டமொன்றை அவசரமாகக் கூட்டவேண்டுமென்று ஜோர்டான் கோரியிருக்கிறது.

### அரபு உச்சி மகாநாடு யோசனைக்கு வரவேற்பு

ஜோர்டானில் அரசாங்கத் துருப்புகளுக்கும் கொமாண்டோக்களுக்குமிடையில் நடைபெற்றுவரும் சண்டைக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்கும்பொருட்டு அரபு நாடுகளின் உச்சி மகாநாடொன்றைக் கூட்டவேண்டுமென்று டுனீஷியா தெரிவித்த யோசனையை ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸர் வரவேற்றிருக்கிறார். லிபியா, அல்ஜீரியா ஆகிய நாடுகள் இதை ஏற்கனவே வரவேற்றுள்ளன. மொராக்கோ மன்னருடன் அல்ஜீரிய அதிபர் ஜெனரல் பூமிதியான் இந்த மகாநாடு சம்பந்தமாக ஆலோசனை நடத்தியிருக்கிறார். அரபு நாடுகளின் உச்சிமகாநாடு அவசரமாகக் கூட்டப்பட வேண்டுமென்றும் இந்த மகாநாட்டில் ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸரும் பாலஸ்தீன விடுதலை இயக்கக் கொமாண்டோக்களின் தலைவர் அரபாட்டும் கலந்துகொள்ளவேண்டுமென்றும் டுனீஷியா யோசனை தெரிவித்திருக்கிறது.

ஜோர்டானில் சண்டையை நிறுத்தும்படி ஜோர்டான் ராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல்மாஜாலி விடுத்த வேண்டுகோள் சில மணி நேரம்தான் செயல்பட்டது. ஜோர்டானில் சண்டையை நிறுத்தும்படி ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸரும் பாலஸ்தீன விடுதலை இயக்க கொமாண்டோக்களின் தலைவர் அரபாட்டும் வேண்டுகோள்விடுத்திருந்ததைத் தொடர்ந்தே ராணுவத் தளபதி சண்டை நிறுத்த உத்தரவைப் பிறப்பித்திருந்தார். சண்டை நிறுத்தம் ஏற்பட்ட சிறிது நேரத்துக்குள்ளேயே பாக்தாத் வானொலி ஒலிபரப்பிய ஒரு செய்தி மீண்டும் அங்கு உக்கிரமான சண்டை ஏற்படக் காரணமாக இருந்தது. ஜோர்டானில் ராணுவ ஆட்சியைக் கவிழ்க்கும்வரை சண்டை ஓயமாட்டாது என்று கொமாண்டோக்களின் தலைவர் தெரிவித்ததாக பாக்தாத் வானொலி ஒலிபரப்பியதுடன் நாஸர் மீதும் குற்றம் சுமத்தியிருந்தது. எதிரிகளுடன் சேர்ந்து [illegible]றவாடுகிறார் நாஸர் என்று பாக்தாத் வானொலி குற்றம் சுமத்தியது.

ஜோர்டான் தலைநகரான அம்மானுக்கு தென்மேற்கே பதினைந்து மைல் தூரத்தில் ஜோர்டான் ராணுவத்துக்குரிய இரண்டு டாங்கிகளை நாசமாக்கியதாக கொமாண்டோக்கள் தெரிவித்தனர்

### சிரியாமீது ஜோர்டான் குற்றச்சாட்டு

ஜோர்டான் எல்லைக்குள் ஆயுதந்தாங்கிய சிரியாத் துருப்புகளை சிரியா அனுப்பியிருப்பதாகவும் அவர்கள் ஜோர்டான் பகுதிகள் சிலவற்றை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகவும் ஜோர்டான் குற்றஞ்சாட்டியிருக்கிறது. இக்குற்றச்சாட்டு பற்றிச் சிரியா இதுவரை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை.

ஆனாலும் சிரியாவிலிருந்தும் ஈராக்கிலிருந்தும் கொமாண்டோக்களுக்கு ஆயுதங்கள் வந்து சேர்ந்திருப்பதாகவும், இவை ரஷ்ய ஆயுதங்களென்றும் மேற்காசியாவிலிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

### மன்னர் மாளிகை மீது ரொக்கெட் தாக்குதல்

## 'மன்னர் படைகளின் கட்டுப்பாடு இருந்தால் யு.எஸ். தலையிடாது'

### அமெரிக்கா தலையிட்டால் நிலைமை மோசமாகும் என்கிறது ரஷ்யா

வாஷிங்டன், செப். 20 ஜோர்டானில் மன்னரின் துருப்புக்களின் கட்டுப்பாட்டில் ஜோர்டான் இருக்கும் வரை, ஜோர்டானில் அமெரிக்கா தலையிடமாட்டாது என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லயார்ட் தெரிவித்தார்.

ஆனாலும் சிரியா, ஈராக்கிலிருந்து கொமாண்டோக்களுக்கு கிடைக்கும் உதவி பற்றி அமெரிக்கா விழிப்புடன் கண்காணித்து வருகிறதென்றும் தொடர்ந்து கவனித்து வருமென்றும் பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

ஜோர்டானில் அமெரிக்கா தலையிட்டால் மிக மோசமான விளைவுகள் ஏற்படலாமென்று சோவியத் யூனியன் ஏற்கனவே அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

ஜோர்டானில் சண்டை நிறுத்தம் ஏற்படவேண்டுமென்று சோவியத் யூனியன் கேட்டிருக்கிறது. ஜோர்டானில் அமெரிக்கா தலையிட்டால்மேற்காசியாவில் மட்டுமல்ல உலக நிலைமையையே குழப்பமாக்கி மோசமாக்கிவிடும் என்று சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' உத்தியோகபூர்வமான ஓர் அறிக்கையில் எச்சரித்திருக்கிறது.

......

### வாசகர்களிடம் ஒப்படைக்கவும்

ஊரதீவு, ஞாயிறு ''தென்னிந்தியப்பத்திரிகைகளைத் தடைசெய்தால் ஈழத்திலே தோன்றவிருக்கும் ஆயிரமாயிரம் எழுத்தாளர்களையும் பேச்சாளர்களையும் ஈழத் தமிழகம் இழந்துவிடும். அதுமாத்திரமல்ல பாரம்பரியமாக எமக்கும் தமிழகத்துக்கும் இருக்கும் கலாசாரத் தொடர்பையும் நாம் இழந்துவிடுவோம். இவை யாவற்றையும் சீர்தூக்கி ஆராய வேண்டும். குப்பைகள் எது? சிறந்தவை எது? என்று பகுத்தறியும் கடமையை அரசு வாசகர்களிடம் விடவேண்டும்.''

மேற்கண்டவாறு கோரும் மகஜரொன்றை ஊரதீவு இளந் தமிழர் மன்றச் செயலாளர் ந. இராசதுரை, அரசினருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

### அயர்லாந்து செல்வார்

வாஷிங்டன், செப். 20 அமெரிக்க அதிபர் நிக்ஸன் அடுத்த மாதம் அயர்லாந்துக்குச் செல்லவிருக்கிறார்.

......

### நகரசபைக்கு எதிராக நஷ்டஈடு வழக்கு

வல்வெட்டித்துறை, ஞாயிறு பருத்தித்துறை நகரசபையினரால் நிறுத்தபட்ட கசாப்பு மடுவம் சம்பந்தமாக நகரசபையிடம் நஷ்டம் கோரி இறைச்சிக் கடைக்காரரான ஏ. கபிரியப்பிள்ளை, கே. யேசுதாசன், கே. தியாகு ஆகியோர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

கசாப்பு மடுவம் அகற்றியது சம்பந்தமாக தலா ரூபா 2000 நட்டத்துடன், நாளொன்றுக்கு ரூபா 75 நட்டமும் வழங்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

வழக்கறிஞர் திரு. வி. பி. சுந்தரலிங்கம் மனுதாரர் சார்பில் ஆஜராகியுள்ளார்.

### கலைமகள் விழாவில் தமிழில் வழிபாடு, பூசைகள்

வெள்ளவத்தை, ஞாயிறு உள்நாட்டு இறைவரித் திணைக்கள இந்து மன்றத்தின் பொதுச்சபைக்கூட்டம் உதவி ஆணையாளர் திரு. க. இரத்தினசபாபதி தலைமையில் புதிய செயலகக்கட்டிடத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் கலைமகள் விழாவை முன்னிட்டு மன்றம் நடாத்தவுள்ள வழிபாடு பூசைகள் யாவும் தமிழிலேயே நடாத்தப்பட வேண்டும் என்று மன்றத்தின் பொதுச்சபை தீர்மானித்துள்ளது.

ஆரியத்தின் வருகையுடன் புறக்கணிக்கப்பட்ட தமிழ் வழிபாட்டினை மீண்டும்கைக்கொள்வதன்மூலம் தமிழுக்கும் சைவத்திற்கும்தொண்டு புரியும் பணியினை மன்றம் மேற்கொண்டு வேறு பல மன்றங்களுக்கும் மற்றும் மத ஸ்தாபனங்களுக்கும்வழிகாட்டியாக அமையவேண்டுமெனக் கூட்டத்தில் பலரும் கருத்துத்தெரிவித்தனர்.

### "தொழிலாளர் ஆலோசனையை நிர்வாகிகள்கவனிக்கவேண்டும்"

பருத்தித்துறை, ஞாயிறு ''ஒரு தொழிற்சாலையின் உற்பத்திவிஷயத்தில் தொழிலாளர் எவ்வித தயக்கமுமின்றித் தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கும்உரிமை பெற்றிருக்கவேண்டும், ஒருதொழிற்சாலை நட்டத்திங் இயங்கிக்கொண்டிருந்தால் அதன் இரகசியம், நிர்வாகிகளிலும் பார்க்க தொழிலாளருக்கே கூடுதலாகத் தெரியும், எனவே தொழிலாளர்காலத்துக்குக்காலம்தமது ஆலோசனைகளை வழங்கும் போது அவற்றைக் கருத்திற் கொண்டு செயலாற்றவேண்டியது நிர்வாகிகளின் பொறுப்பாகும்.''

இவ்வாறு வடபிரதேசக் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் பரந்தன் தொழிற்சாலைப் பொது ஊழியர்சங்கத்தில் உரை நிகழ்த்துப் போது குறிப்பிட்டார். சங்கத்தலைவர் திரு. சி. விக்னேஸ்வரன் தலைமைவகித்தார்.

தொடர்ந்துபேசிய திரு,வ பொன்னம்பலம், சோஷலிஸ நாடுகளில் உற்பத்திப் பெருக்கத்திற்குக் காரணம், அங்கு தொழிலாளரின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை நிர்வாகஸ்தர் ஏற்று நடப்பது தானென்றும், அவ்வித நிலைமை நமது நாட்டிலும் உருவாகவேண்டும் என்றும் கூறினார்.

......

### விவசாயிகள்

### 'ஆசிரியர் நியமிக்கவும் அல்லது 8-ம் வகுப்பு நடத்தமாட்டோம்'

வேலணை, ஞாயிறு 'கல்வி அமைச்சின் புதிய திட்டத்துக்கு அமைய 8-ம் வகுப்பை நாம் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் உடனடியாக கணிதத்திலும், விஞ்ஞானத்திலும், விசேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். அல்லாவிடில் இப்போதிருப்பதுபோலவே 8-ம் வகுப்பு மாணவர்களை வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் அனுமதிக்கப்படவேண்டும்' எனக் கோரும் தீர்மானம் ஒன்று வேலணை அம்பிகை மகளிர் வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கக்கூட்டத்துல் நிறைவேற்றப்பட்டது.

தீவுப்பகுதி எம். பி. ஊடாக இத்தீர்மானம் கல்வியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும்.

......

நீர்வேலியில்

### அருள்நெறி மன்றம்

நீர்வேலி, ஞாயிறு சமயவளர்ச்சியை நோக்கமாகக்கொண்டு நீர்வேலியில் மன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆலயங்களில் பஜனைவழிபாடுகளும் பூரணை தினங்களில் சமயப்

போர்ஹான்ஸ்
புன்னகைப் புதிர்
போட்டி.
ரூபா 17,650-00
பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குற்றச்சாட்டு பற்றிச் சிரியா இதுவரை உறுதிப் ... கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

## மன்னர் மாளிகை மீது ரொக்கெட் தாக்குதல்

ஜோர்டான் மன்னர் ஹுசேனின் கோடைக்கால வாசஸ்தல மாளிகைமீது கொமாண்டோக்கள் நேற்று ரொக்கெட் தாக்குதல் நடத்தியதாக ஒரு செய்தி கூறியது. ஆனால் அதன் சேத விபரங்களெதுவும் வெளிவரவில்லை. ரொக்கெட் தாக்குதல் நடைபெற்ற சமயத்தில் அந்த மாளிகையில் மன்னர் இருந்தாரா என்பதுபற்றியும் தகவல் இல்லை.

சென்ற இரண்டு தினங்களில் ஜோர்டான் துருப்புகளுக்கும் கொமாண்டோக்களுக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் ஐயாயிரம் பேருக்குமதிகமானவர்கள் மாண்டிருக்கலாமென்றும் பெருந்தொகையானோர் காயமடைந்திருக்கலாமென்றும் செய்திகள் கூறுகின்றன. அகதிகள் முகாம்மீது தாக்குதல் நடைபெற்றதன் விளைவாக இவ்வளவு பெருந்தொகையானோர் மாண்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

வைத்திய மற்றும் உதவிகள் அவசரமாகத் தேவைப்படுவதாக ஜோர்டான் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

0 0 0

பொருளாதார வளர்ச்சியுடன்

## 'ஆன்மீக வளர்ச்சியும் இந்தியாவுக்குத்தேவை'

கன்யாகுமாரி, செப் 20

ஒரு நாட்டை முன்னேற்றுவதற்குப் பொருளாதார வளர்ச்சி மட்டும்போதாது. பொருளாதார வளர்ச்சியோடு இயற்கைக்கு இன்றியமையாத ஆன்மீகவளர்ச்சியும் ஏற்படவேண்டும்.

அண்மையில் விவேகானந்தர் ஞாபகச் சின்னத்தைப் பார்வையிட்ட பின்னர் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் பிரதமர் இந்திரா காந்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இன்று இந்தியாவுக்கு ஆன்மீக மறுமலர்ச்சி அத்தியாவசியமான தொன்றாகும் வறுமையை ஒழிப்பதாக நாங்கள் உறுதியளித்திருேம். ஆனால் வறுமையை நாட்டில் ஒழிப்பதுமட்டும் போதாது ஆன்மீக உணர்ச்சியையும் ஏற்படுத்தவேண்டும். இந்த இடத்தில்தான் சுவாமி விவேகானந்தரின் போதனைகள் எங்களுக்கு உதவியாகவிருக்கும்.

காந்திஜி செய்ததுபோன்று அரசியலும் ஆன்மீகமும் ஒன்றுபடவேண்டும். இதுவே எமக்குத் தேவையானதாகும். அரசியல் என்பது ஒருபொழுதும் கூடாததொன்றல்ல. மக்கள் அவ்வரசியலைக் கருவியாகக் கொண்டு செய்தவைகளே தவறானவைகளாகும். பொருளாதார சமூகரீதியில் மக்களின் வாழ்க்கைத் தரத்தையுயர்த்தும் பெரியதொரு இயக்கமாக இருக்கவேண்டிய அரசியலை நாம் தனிப்பட்ட ஒருவரின் சிந்தனையாக, நலனாக உருவாக்கிவிட்டோம்.

## 'அரசாங்கத்திற்கு தமிழர் ஆதரவளிக்கவேண்டும்'

### ப. சபைக்கு வரும் பிரேரணை

பருத்தித்துறை, ஞாயிறு


இன்றுள்ள முற்போக்கு சோஷலிச அரசாங்கம்தனது கொள்கைமூலமும் வேலைத்திட்டத்தின் மூலமும் தமிழ் மக்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்டுள்ள சில ஆரம்ப முயற்சிகள்மூலமும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய சந்தேகங்களையும் அச்சங்களையும் குறிப்பிடக் கூடியளவு நீக்கமுன்வந்துள்ளமையால் தமிழ்மக்கள் இவ்வரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவர விருக்கும் சகல பொருளாதார அரசியல் மாற்றங்களையும் ஆதரிக்கவேண்டியது அவசியம்.

மேற்காணும் பிரேரணையொன்றை நெல்லியடி பட்டினசபையின் 2ம் வட்டார உறுப்பினர் திரு ந பாஸ்கரன் மேற்படி சபைக் கூட்டத்தில், பிரேரிக்கவிருப்பதாகமுன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.


# போட்டி.

## ரூபா 17,650-00

### பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது. ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்



| | |
|---|---|
| முதலாவது பரிசு | ரூபா 5000-00 |
| இரண்டாவது பரிசு | ரூபா 3000-00 |
| மூன்ருவது பரிசு | ரூபா 2000-00 |

ரூபா 100/- விகிதம் 50 ஆறுதல் பரிசுகள் — ரூபா 5000-00

ரூபா 50/- விகிதம் 53 வியாபாரிகளுக்கான பரிசுகள் — ரூபா 2650-00

மேலே 4 அழகிய போர்ஹான்ஸ் பாவனையாளர்கள் அங்குமிங்குமாக காணப்படுகிருர்கள். நீங்கள் செய்யவேண்டியது இதுதான். கீழேயுள்ள போர்ஹான்ஸ் பாவனையாளர்களின் அழகிய புன்னகையை வெட்டி எடுத்து சரியான முகத்துடன் சேர்த்து முழுப் படமாக்குங்கள்.

முழுமையாக்கப்பட்ட படங்களை ஒரு மொத்தமான கடுதாசியிலோ அல்லது மட்டையிலோ ஒட்டி உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றை பிரவேசப் பத்திரத்தில் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்: உங்கள் வாடிக்கைக் கடைக்காரரின் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடத் தவருதீர்கள். ஏனெனில் உங்கள் வியாபாரிக்கும் 50/- பரிசு உண்டு. நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகள் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகளை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

வெத்துப் பெட்டியுடன் கூடிய பிரவேசப்பத்திரங்களை "போர்ஹான்ஸ் புன்னகைப் புதிர் போட்டி, C/o. ஷெனித் அட்வெடைசிங், த. பெ. இல. 479, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பிவையுங்கள்.

இப்போட்டியில் மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், ஷெனித் அட்வெடைசிங் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களைத்தவிர, இலங்கையில் வசிக்கும் எவரும் கலந்து கொள்ளலாம்.

மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது. இதையிட்டு எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

இப்போட்டி 1970-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி முடிவடையும்.

பிரவேசப் பத்திரம்

பெயர்: ........................

விலாசம்: ........................

........................

வியாபாரியின்
பெயர்: ........................

விலாசம்: ........................

........................




ZENITH


வாஸஸ்தர் ஏற்று நடப்பது தானென்றும், அவ்வித நிலைமை நமது நாட்டிலும் உருவாகவேண்டும் என்றும் கூறினார்.

......

## விவசாயிகள் கஷ்டம்தீர...

உடுப்பிட்டி ஞாயிறு

விவசாயிகளின் நலன் கருதிப் புகையிலையை முன்னர் போல் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதி தரவேண்டும். பீடிப் புகையிலை உற்பத்தியை அபிவிருத்தி செய்யவேண்டும் அதேவேளையில் அரசாங்கமே இவைகளைக் கொள்வனவு செய்து தரகர் தொல்லைகளிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும்

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை அல்வாய் தெற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளை உணவு, காணியமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பக்கடுவ விற்கு அனுப்பி வைத்துள்ளது.

உருளைக் கிழங்கைக் கூடுதலாக உற்பத்தி செய்யவும், அவற்றை நீண்ட காலமாகப் பாதுகாத்துக் கொள்ளத் தேவைப்படும்மருந்து வகைகளையும் தந்துதவ அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும், வெளி நாட்டு வெங்காய இறக்குமதியைத் தடைசெய்து வட இலங்கையிலுள்ள வெங்காயத்தை இலங்கை பூராவும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அம் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

......

## ஆசிரியர்கள் வேண்டும்

தாவடி, ஞாயிறு

கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம், தலைமையாசிரியர் திரு ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றபோது கணிதம், விஞ்ஞான ஆசிரியர்களை நியமித்துத் தரும்படி கல்வி அமைச்சரைக் கோரும் பிரேரணை நிறைவேறியது.

......

## தற்கொலை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கரவெட்டி கிழக்கு நுணுவிலைச் சேர்ந்த இளையதம்பி மார்க்கண்டு (வயது 35) என்பவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இறந்தவரின் மனைவி புவனம், வீ. சிவப்பிரகாசம் ஆகியோர் சாட்சியமளித்த பின் மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## மன்றம்

நீர்வேலி, ஞாயிறு

சமயவளர்ச்சியை நோக்கமாகக்கொண்டு நீர்வேலியில் மன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆலயங்களில் பஜனைவழிபாடுகளும் பூரணை தினங்களில் சமயப் பிரசங்கங்களும் நடத்துவது இதன் முக்கிய நோக்கங்களாகும். அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தலைவர் யோகி வைபவத்தில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார். நீர்வேலி காமாட்சியம்பாள் கோவில் முன்றலில் நடைபெற்ற இவ்வைபவத்தில் இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் திரு க. வல்லிபுரம், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு சி. தர்மலிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வட்டார வித்தியாதரிசி திரு. எஸ். சண்முகநாதன், திரு. சி. தர்மலிங்கம், ஆயர்பாடி வே. த. மயில்வாகனம் ஆகியோர் போஷகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். மற்றும் உத்தியோகஸ் விபரம் வருமாறு: தலைவர்: திரு. செ. குணபாலசிங்கம், உபதலைவர்: திரு. க. வல்லிபுரம், காரியதரிசி: திரு. த. பரராசசிங்கம், உபகாரியதரிசி: திரு. ஆர். எம். நாகலிங்கம், தனாதிகாரி: திரு. அ. கனகரத்தினம், உபதனாதிகாரி திரு. ப. வேலுப்பிள்ளை, கணக்குப் பார்வையாளர்: ந. நடனராஜமணி.

......

## இலவச நூல்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவிலின் சிறப்புப்பற்றி அளவையூர் சஞ்சீவி அருட்கவி சீ. விநாசித்தம்பி எழுதிய 'செல்வச் சந்தன் அன்புத் திருப்புகழ்' என்னும் பாமாலை வல்வை சோடா கம்பெனி உரிமையாளர் திரு. சிவசுப்பிரமணியத்தினால் அச்சிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட்டது. நூலின் முதற் பிரதியைக்கோவிலின் முன்றலில் வைத்து நீர்வேலி கந்தசாமி கோவில் தர்மகர்த்தா சபைத் தலைவரும் சமாதான நீதவானுமான திரு. மு. பூபாலசிங்கம் வழங்கினார்.

......

## இடமாற்றம்

கோட்டை, ஞாயிறு

கம்பஹா உதவிபொலிஸ் சுப்பிரின்டனாகக் கடமையாற்றிய திரு. ஆர். சி. தவராஜா பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நோய்க்கு மருந்துகளை உட்கொள்வதை விட இயற்கை முறையில் சிகிச்சை செய்தல் சாலவும் சிறந்தது. ஈரக்களிமண் பட்டியைக் கட்டுதல், இடுப்புவரை நீரில் நனைத்தல் சூரியவெளிச்சத்தில் இருத்தல், திறந்தவெளியில் படுத்துறங்குதல் நோய்களைக் கண்டிக்ககூடிய சிறந்த முறைகளாகும்.

—காந்தியடிகள்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 5-ந் திகதி (21-9-70)

# இந்திராவின் வெற்றி

கேரள சட்டசபைக்கு நடைபெற்ற இடைத்தேர்தல் முடிவை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் வெற்றி என்றே கூறவேண்டும். மொத்தம் 133 பேர் அடங்கிய அச்சபையில் அவரது புதிய காங்கிரஸ் கட்சிக்கு சபை கலைக்கப்படு முன்பாக 6 ஸ்தானங்களே இருந்தன. இப்போது நடந்த தேர்தலில் அக்கட்சிக்கு 32 தொகுதிகளில் வெற்றி கிடைத்திருக்கின்றது. மற்ற எல்லாக் கட்சிகளையும் விட இக்கட்சி தான் அதிக ஸ்தானங்கள் பெற்றுள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சட்டசபை கலைக்கப்படுகையில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் (பீகிங்) கட்சிக்கு 49 ஸ்தானங்கள் இருந்தன. அது 31 ஆகக் குறைந்துள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பலமும் இத்தேர்தலின் பயனாகக் குறைந்துள்ளது. இதே சமயம் இந்திரா காந்தியின் கட்சிக்கு மக்களின் ஆதரவு முன்னைவிட மிக அதிகமாகக் கிடைத்துள்ளதிலிருந்து, அவர் மீதும் அவரது கட்சி மீதும் கேரள பொதுமக்களுக்கு நம்பிக்கை அதிகரித்துள்ளதென்பதைக் காணலாம் புதிய காங்கிரஸும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் ஒத்துழைத்து அங்கு மந்திரி சபையை அமைக்கவிருக்கின்றன. கேரளத்தில் ஸ்திரமான ஆட்சி பல வருடங்களாக இல்லை அதனால் அந்த ராஜீய பொதுமக்கள் பட்டு வந்த கஷ்டங்கள் கொஞ்சமல்ல. இனி ஸ்திரமான ஆட்சி ஏற்படும்படி கேரள பொதுமக்கள் இத்தேர்தல் மூலம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

பழைய காங்கிரஸிலிருந்து பிரிந்து, சோஷலிஸ அடிப்படையில் பிரதமர் இந்திரா புதிய கட்சியை அமைத்திராவிடில் கேரள பொதுமக்களும் பிரதமர் இந்திராவைப் பற்றியும் அவர் பொதுமக்களின் மனதை ஜனநாயக வழியில் எப்படித் திருப்பி வருகிறார் என்பதையும் வெளிப்படக் கூறாவிடினும் மனதுக்குள்ளாவது உணர வேண்டும்.

ராஜாஜியின் வாக்கு பலிக்குமாயின், கேரளத்தில் இந்திராவுக்குக் கிடைத்த முதல் வெற்றி இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் அவருக்கு வெற்றி கிடைப்பதாக இருக்கும். சென்னை முதல் அமைச்சர் திரு. கருணாநிதி கூறியது போல், இப்போது இந்திரா காந்தியை விட்டால் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை யார் வெற்றிகரமாக நிர்வகிக்க முடியும்? ராஜாஜியா? அல்லது காமராஜரா? இந்திராவை ஒரு பெண்ணென்றும், பெண் பலவீனமானவரென்றும், அவர் அதிகார வெறி பிடித்தவரென்றும் ஒதுக்குவது அரசியல் ஞானமாகாது. கேரளத்தில் பிரதமர் இந்திராவின் கட்சிக்கு கேரளப் பெண்மணிகளின் வாக்குகள் அதிகம் கிடைத்திருப்பின் அதில் வியப்பில்லை. மக்களின் பிரச்னைகளை புதிய கேரள அரசாங்கம் வெற்றிகரமாகத் தீர்க்க முற்படின் மற்றப் பொதுமக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் புதிய காங்கிரஸ் பெற வழி ஏற்படும்.

பிரதமர் இந்திராவை ஒரு கம்யூனிஸ்ட் என்றும் மாஸ்கோவின் அடிவருடி என்றும் அவரது அரசியல் எதிரிகள் குற்றம் சுமத்தி வந்தனர். அந்தக் குற்றச்சாட்டு எவ்வளவு தவறு என்பதை கன்யாகுமரியிலே அவர் பேசியதும் நடந்துகொண்டதும் காட்டுகின்றன. சுவாமி விவேகானந்தரின் புதிய கோயிலை அவர் தரிசித்துவிட்டுப்பேசிய ஒரு கூட்டத்தில் 'முதலாளித்துவமும் கம்யூ

# அதிகரிக்கும் திருடர் தொல்லையை நீக்க அரசாங்கம் முன்வருமா?

தலவாக்கொல்லையிலிருந்து ஒரு பெரிய குடும்பத்தார் வேண்டுதலுக்காக முன்னேஸ்வரம் வந்திருந்தார்கள். போகவர ரயிலில் ரிட்டன்டிக்கெட் எடுத்து வந்த அவர்கள், பிள்ளைகளுக்கு முடி இறக்கி, தேர்த் திருவிழாவையும் பார்த்துவிட்டு, சிலாபம் ஸ்டேஷனில் ரயில் ஏற வந்திருந்தனர். ஸ்டேஷனில் இருக்கையில் அவர்களிடமிருந்த 'பர்ஸை' யாரோ 'அபேஸ்' செய்துவிட்டார். அதில் ரயில்வே டிக்கெட் சுமார் ரூ. 80 முதலியன இருந்தன ரயிலில் திரும்பிச் செல்ல டிக்கெட்டும் இல்லை. பசிக்கு ஏதும் வாங்கிச்சாப்பிட காசும் இல்லை, ஸ்டேஷன் மாஸ்டர் அனுதாபப்பட்டு, அவர்களுக்கு உதவ ஏதோ முயற்சி எடுத்தார்.

பக்கத்தில் இருந்த மூன்று சிறுவர்களை சந்தேகத்தின் மீதுபிடித்து, ரயில்வேகாவல் படையினர் அதட்டிக்கேட்கவே தாங்களே அதையெடுத்ததாயும் ஆனால் உடன் அதை, 'சித்தப்பா' விடம் கொடுத்துவிட்டதாயும் தெரிவித்தனர். அவர்களுக்கு வயது சுமார் பத்துதான் இருக்கும் 'சித்தப்பா' வின் பெயரைக்கேட்டால் தெரியாதென்றனர், அவர் இருக்குமிடமும் தெரியாதாம். அம் மூவரையும் பிடித்து, பொலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுசென்றனர். 'சித்தப்பா' இதற்குள் எங்கே மறைந்துவிட்டாரோ இவ்வித சிறுவர்களை கள்வர்கள் பயன்படுத்தித் தாங்கள் தப்புகின்றார்கள். இதுவே அவர்கள் பிழைப்பு!

தேர்த் திருவிழாவுக்கு முதல்நாள் நல்லூரிலிருந்து முன்னேஸ்வரத்துக்கு வந்த ஒரு குடும்பத்தினர் தங்கச் சங்கிலி ஒன்றை இழந்துவிட்டனராம். திருவிழாவுக்காக அதை இரவல்வாங்கி தங்கள் பிள்ளைக்குப் போட்டுக் கொண்டுவந்ததாகவும், யாரோ அதை களவாடிச் சென்றுவிட்டதாயும் அது மூன்றரைப்பவுன் சங்கிலியென்றும் சொல்லிவருந்தினர். பொலீசிடம் புகார் செய்யும்படி கேட்டபோது, ஆளைப்பிடித்துத் தந்தால் தாங்கள் நடவடிக்கை எடுப்பதாகப் பொலிசார் தெரிவித்தனராம்!

## ஐயாறன் எழுதுவது

மற்றொருவரும் இப்படியே ஒருசங்கிலியை இழந்ததாகக் கேள்விப்பட்டேன் இப்படி எவ்வளவோ! திருவிழாவுக்கு நகைகளைப் போட்டுவருவது அவசியந்தானா? அந்த வீண் கௌரவத்தால் ஏற்படும் சங்கடமே இது பிறரை நோவதைவிட, நாமே முன் ஜாக்கிரதையாக இருந்துவிடுவது உத்தமமல்லவா?

0 0 0

கொழும்பு நகரிலே பஸ்ஸில் 'பிக்பாக்கெட்டுகாரர்' பலர் 'தொழில்' நடத்துகிறார்கள். மாடி பஸ்ஸில் படிக்கட்டுகளின் மேலிருந்து கொண்டு கீழே குனிந்து அங்கு ஏறவரும் அப்பாவி பிரயாணிகளின் சட்டைப் பைகளையும், கால்சட்டையிலுள்ள பையையும் ஆளையும் ஒரு நோட்டம் விடுகின்றனர். பிரயாணியின் கவனம் வேறுபக்கம் திரும்பி இருக்கையில், மெதுவாக பையில் கையைவிட்டு, உள்ளிருக்கும் பர்ஸையோ, பேனாவையோ எடுத்து உடன் வேறுபல கைகளுக்கு மாற்றிவிடுகின்றனர், பஸ்ஸிலேயே இரண்டு மூன்று பேராகவே வந்து இப்படிச் செய்கின்றனர். கண்டக்டர் இதையெல்லாம் பார்த்தும் பாராததுபோல்இருக்கிறார். அவர் இதில் தலையிடப்பயம் தெருவில் நடந்துசென்றாலும் காடையர் மறித்து கைக்கடிகாரம், மோதிரம் முதலியவற்றை கத்தியைக் காட்டி பயமுறுத்திப்பறிக்கின்றார்கள்.

ஊரில் திருடர்களின் தொல்லை அதிகரித்து விட்டது. அவர்களைப்பிடித்து, பொதுமக்களைக்காக்க யாருமில்லை நாளுக்குநாள் இந்தத் தொல்லை அதிகரிக்கிறது அரசாங்கத்தின் நற்பெயர் கெடுகிறது. இந்தத் தொல்லையை போலீசார் மட்டும் தீர்க்கமுடியாது பொதுமக்களும்ஒத்துழைக்க வேண்டும். அதற்குப் புதிய அரசாங்கம் ஏதாவது வழி செய்யுமா?

0 0 0

பெரியார் ஈ. வே ரா. அவர்களுக்கு 92 வயதாகிறது. அவர் நீடூழிவாழ்க! அவரது பிறந்தினத்தன்று அவருக்கு சமவயதான வரும், 'அரசியல் எதிரி'யுமான ராஜாஜி வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்ததாக பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன் அரசியலில் எப்படி இருப்பினும் தனிப்பட்ட முறையில் இருவரும் நெருங்கிய நண்பர்கள். இவ்விரு முதுபெரும் தலைவர்களின் வாழ்க்கைகளே தமிழ்நாடு சரித்திரத்துடன் சென்ற பலவருடகாலமாகப் பின்னிப்பிணைந்துள்ளது. வயது அதிகமானாலும் அரசியல் பொதுவாழ்விலே அவர்களது செல்வாக்குச் சற்றும் குறையவில்லை. இவ்விருவரும் தங்கள் சுயசரிதையை எழுதினால், அதுவே தமிழகத்தின் பலவருட சரித்திரமாக அமையும். மிகவும் ருசியாகவும் இருக்கும் அவர்கள் எழுதாவிடில் அவர்களுடன் பல உண்மை விபரங்கள் மறைந்துவிடுவதாகும். அத்தலைவர்களின் அனுபவங்கள் தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் மிகப்பயன்படும். அவர்கள் எழுதுவார்களா? யாரும் அவர்களை எழுதச் செய்வார்களா?

0 0 0

வானைக்காவில் வெண்மதி
வல்குபுல்குவார்சடை
ஏனைக்காவின் இன்மொழி
தேவி பாகமாகினாய்
ஆனைக்காவிலண்ணலை
அபயமாக வாழ்பவர்க்கு
ஏனைக்காவல் ஏதும்
ஏதமில்லையே,

—திருஞானசம்பந்தர்

# சிரியாவின் தாக்குதலை ஜோர்டான் முறியடித்ததாம்

அம்மான், செப். 20

சிரியாப்படைகளின் தாக்குதலொன்றை ஜோர்டான் படைகள் முறியடித்துவிட்டதாக இன்று அம்மான் வானொலிதெரிவித்தது.

கொமாண்டோக்களுடன் ஏற்பட்ட சண்டையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரன உதவி வழங்கும்படி கோரி பிரிட்டன், அமெரிக்கா மற்றும் நாடுகளுக்கு ஜோர்டான் அரசு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பிரிட்டனிலிருந்து உதவிப் பொருள்களுடன் ஒரு விமானம் அம்மான் வருவதற்குத் தயாராக இருக்கிறதாம்.

ஜோர்டானுடனுள்ள உறவை நீக்கிக் கொள்ளும்படியும் அதற்கு அளிக்கும் உதவியை நிறுத்தும்படியும் கோரி குவெய்த்தில் 70,000 பேர் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

# நாட்டில் அதிகம் பரவிவரும் முதலாவது நோய்

கோட்டை, ஞாயிறு

காசநோய் இன்றுநாட்டில் அதிகமாகப்பரவிவருகிறது. இது நாட்டின் சௌக்கியத்தைப் பாதிக்கும் முதலாவது நோயாகலாம் என நம்பப்படுகிறது.

சமீபத்தில் சௌக்கிய இலாகா எடுத்துள்ள புள்ளிவிபரத்திலிருந்து இது தெரியவந்துள்ளது. காசநோயால் பீடிக்கப்பட்ட ஒவ்வொரு 8 பேருக்கும் ஒருவர் வீதம் இறக்கின்றனர். கடந்தாண்டு காசநோயால் பீடிக்கப்பட்ட 7000 பேரில் 1,130 பேர் மரணமடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

இவ்வாறு வருடாவருடம் இந்நோயால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் தொகையைக் குறைக்க சுகாதார அமைச்சு காசநோய் தடுப்புநடவடிக்கைகளை விஸ்தரிக்க விருக்கிறது என சுகாதார அமைச்சைச்

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# தமிழ் அரசாங்க ஊழியரும் பதவி உயர்வுப்பரீட்சைகளும்

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போலத் தமிழ் அரசாங்க ஊழியர்களின் தற்போதைய நிலையும் எதிர்காலமும் மிகவும் கவலைக்கிடமான கணிப்புகளாகவே உள்ளன. வெள்ளையர்களின் ஆதிக்கத்தில் ஆங்கிலத்தைப்படித்து ஆங்கில மொழிமூலம் பதவி உயர்வுப் பரீட்சைகளையும் எடுத்து முயல்வேகத்தில் முன்னேறிவந்த தமிழ் அரசாங்க ஊழியர்கள் மிகச் சமீபகாலமாக அரசகரும மொழித்தொல்லைகளுக்காட்பட்டுப் பின்னர் மிகவும் பிரயத்தனப்பட்டு எட்டாம் வகுப்புச் சித்திகண்ட பின்னர்இரண்டாந்தரபதவி உயர்வு (கிளாஸ் ரூ) பரீட்சையையும் தாய் மொழியிலேயே எடுக்கின்றார்கள். இதற்குரிய விண்ணப்பத்தைச் சிங்களத்தில் நிரப்பிக்கொடுத்தாலும் பரீட்சையைத் தமிழில் எழுதிவிட்டு முடிவு எப்போது வரும் என்று காத்திருக்கிறார்கள், முடிவு வரும்போது விகிதாசாரப்படி மிக மிகச் சொற்பமானவர்களையே 'கிளாஸ் ரூ' வுக்குத் தெரிவு செய்கிறார்கள். மிகவும் நன்றாகச் செய்தவர்கள்கூட இந்த விகிதாசார முறைத் தேர்வினால் ஏமாற்றமடைகிறார்கள். சமீபத்தில் வெளியாகிய அரசாங்க ஊழியரின் 'கிளாஸ் ரூ' பரீட்சை முடிவுகள் இதைத்தான் காட்டுகின்றன. 250 பேரைத் தெரிவுசெய்தபோது சுமார் 17 தமிழர்களே இடம் பெற்றுள்ளனர். புகையிரதத் திணைக்களத்தில் 5 தமிழர்களே சித்தியடைந்துள்ளனர். தபால் தந்திப்போக்குவரத்து திணைக்களத்தில் ஒரு தமிழரேனும் சித்தியடையவில்லை.

இந்த நிலையில் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் புதிய பதவிகளையோ பதவி உயர்வுகளையோ எப்படிப் பெறமுடியும்! ஒருபுறம் அரசாங்கமொழிக் கொள்கையும், விகிதாசாரத் தேர்வு முறையும் நசுக்குகின்றன, மறுபுறம் உயர் பதவி வகிக்கும் தமிழர்களின் பாராமுகம். ஆக. அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், புகைவண்டி ஊழியர் சங்கம், தமிழ்த்தட்டெழுத்தாளர்சங்கம் என்று சில மொழிவழித்தொழிற் சங்கங்கள்தான் ஆண்டுக்கொரு பொதுக்கூட்டம் நடத்தித்தாம் 'ஏதோ' தமிழ் ஊழியர்களுக்குச் செய்யமுனைகின்றன 'கிளாஸ் ரூ' பரீட்சையில் நடைபெறும் அக்கிரமங்களுக்கு எதிராக இந்தச்சங்கங்கள் ஏன் வன்மையான நடவடிக்கை எடுக்கக் கூடாது? அப்படியானால் எமது தமிழ் ஊழியர்கள் சிங்களச் சங்கங்களுடன் சேர்ந்தாவது மிச்சமுள்ள பதவிகளைப் பெறுவதுதான் ஒரே மாற்று மருந்தா? சூனியமாகிவரும் அரசாங்க ஊழியரின் (தமிழ் பேசும்) எதிர்காலத்தைச் சுபீட்சமான தாக்கவழியில்லையா?

'ஓர் அரசாங்க ஊழியன்'
கொழும்பு.

# பல்கலைக் கழகத்தில் இந்து சமயபாடம்

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இந்து சமயம் ஒரு பாடமாக இன்னுந்தான் அங்கீகரிக்கப்படவில்லை. கடந்த க. பொ. த (உயர்தர) பரீட்சையில் இந்துசமயம் ஒரு பாடமாக சித்தியடைந்த மாணவர்கள் இன்று திரிசங்கு சொர்க்க நிலையில் இருக்கிறார்கள். கடைசிசட்டத்துறைக் கல்விப் பிரிவிலாவது தமக்கு இடம் கிடைக்காதா என்று இவர்கள் ஏங்குகிறார்கள். பேராதனைப் பல்கலைக் கழகத்தார் இந்த 'இந்து சமயம்' பிரச்சனைக்குத் தெளிவானதோர் அறிக்கையைத், தமது முற்று முழுதான முடிபாக தெரிவிக்க வேண்டும். இத

கேரளம்

# கவர்னரை சந்தித்தனர்

திருவனந்தபுரம், செப் 20

கேரள ராஜ்ய தேர்தலில் பெரும்பான்மைப் பலம் பெற்றிருக்கும் இந்திரா காங்கிரஸின் கேளரக் கிளைத் தலைவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் தலைவர்களும் இன்று கேரள மாநில கவர்னரைச் சந்தித்துப் பேசினர். இதன் பின்னர் உயர் தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

பழைய காங்கிரஸிலிருந்து பிரிந்து, சோஷலிஸ அடிப்படையில் பிரதமர் இந்திரா புதிய கட்சியை அமைத்திராவிடில் கேரள பொதுமக்களின் ஆதரவு காங்கிரஸுக்கு இம்முறையும் கிடைத்திருக்குமா வென்பது பெரிதும்சந்தேகம். படித்த வேலையற்றோர் அதிகமுள்ள கேரளத்தில் தங்கள் பிரச்னைகளை ஒரு சோஷலிஸ அரசாங்கம்தான் ஓரளவாவது தீர்க்க முடியுமென்பது அவர்களது நம்பிக்கை. சோஷலிஸ பாதையில் பல எதிர்ப்புகளையும் கண்டு அஞ்சாமல் துணிச்சலுடன் செல்லும் இந்திராவின் காங்கிரஸ் மீது பொதுமக்கள் புதிய நம்பிக்கை கொண்டு அதை ஆதரித்துள்ளனர். பலாத்கார வழியிலே தீவிரமாகச் சென்று கொண்டிருந்த கேரளத்தை அமைதியான ஜனநாயக வழியில் திருப்பிய புகழும் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சேரும்.

'அறிவிலும் அனுபவத்திலும் சிறந்த கேரளம், இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு நல்ல முன்மாதிரியைக் காட்டும்' என்று, இத்தேர்தலுக்கு முன் ராஜாஜி நம்பிக்கை தெரிவித்தார் ராஜாஜியின் சுதந்திரா கட்சிக்கோ, பழைய காங்கிரஸ், ஜனசங் முதலிய கட்சிகளுக்கோ ஒருஸ்தானம் கூட கிடைக்கவில்லை. இதைப்பற்றி ராஜாஜி என்ன கூறுவாரோ? எப்படியும் இந்தத் தேர்தல் முடிவுகளை அறிந்த பின்னர் அவரும் பழைய சிண்டிகேட் காங்கிரஸ்கன்யாகுமரியிலே அவர் பேசியதும் நடந்துகொண்டதும் காட்டுகின்றன. சுவாமி விவேகானந்தரின் புதிய கோயிலை அவர் திறந்துவைத்துப்பேசிய ஒரு கூட்டத்தில் 'முதலாளித்துவமும் கம்யூனிஸமும் உலகாயதத்தையே வற்புறுத்துவதால் அவை மனிதனின் ஆழ்ந்த ஆவல்களைப் பூர்த்தி செய்யத்தவறிவிட்டன. உலகிலே வாலிபர்கள் பழைய ஏற்பாட்டைக் குறை கூறுகின்றார்கள். காரணம் அக்கோட்பாட்டின்படி பழைய தலைமுறைகளைச் சேர்ந்த நாம் வாழத்தவறிவிட்டதுதான். ஆகவேதான் வாலிபர்கள் புது வழிகளைத் தேடுகின்றனர். சுவாமி விவேகானந்தர் கூறியதுபோல், நாம் பொதுநலத்தை நினைத்து அதற்காகவே உழைத்தோமாயின் நமது தனிப்பட்ட விமோசனமும் அதில் அடங்கியிருக்கும். ஆகவே பொருளாதார வறுமையை மட்டுமன்றி ஆத்மீகத்துறையில் ஏற்பட்டுள்ள வறுமையையும் தீர்க்க நாம் எல்லா முயற்சிகளையும் செய்யவேண்டும்' என்று குறிப்பிட்டு கன்யாகுமரி ஆலயத்திற்கும் சென்று வழிபட்டுள்ளார். பக்தியால் மன உறுதியும் துணிச்சலும் அவர் பெற்றதாலேயே மலை போன்ற பல சோதனைகளையும் அவர் சமாளித்து வெற்றி பெற முடிகின்றது. கேரளத்தில் அவருக்கு ஏற்பட்டுள்ள இந்த முதல் தேர்தல் வெற்றி அகில இந்தியாவிலும் இனி வரும் தேர்தல்களுக்கு முன்னோடியாக இருக்குமென்று நம்புவது தவறாகாது.

# 'இனிய கவிதைகள் மூலம் அறவுரை ஊட்டியவர் பாரதி'

சுழிபுரம், ஞாயிறு

''பொழுதுபோக்குக்காகப் பாடல்கள் பாடியவன் அல்ல பாரதி. சமூகத்தைப்பார்த்து பேய் பிசாசு சூனியம் என்ற வறட்டுத் தத்துவங்களையும், காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்களையும் அறவே நீக்கும்படி அறைகூவல் விடுத்தான் தனது நாடு, தனது மொழியாவும் மேம்பாடடையவும் அதற்கான வழிகளைக்காட்டுவதில் தனது இனிய கவிதைகள் மூலம் அறிய அறவுரைகள் கூறியும் உணர்ச்சியை ஊட்டினான் பாரதி, என்பதை தமிழ் பேசும் மக்கள் நன்கு அறிய வேண்டும். மொழியைக் காக்கவும், தனது இனத்தைப்பேணவும் தமக்குள் ஒரு விதி செய்யவேண்டும். அதை எப்போதும் காக்கவேண்டும் அன்று வாழ்ந்த பாரதி இதையேகூறினான்''

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கலலூரி உயர்தர மாணவ மன்றத்தினரால் நடாத்தப்பெற்ற பாரதி விழாவில் உரையாற்றிய வழக்கறிஞர் திரு அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

செல்வன் ந. சிவராசாவின் தலைமையில் விழா நடைபெற்றது. திருவாளர்கள் சி. சிவபாக்கியநாதன். மு. திருநாவுக்கரசு, பண்டிதர் க. நாகலிங்கம் ஆகியோர் பாரதியாரின் கவிதைகள் பற்றி சிறந்த கருத்துரைகள் வழங்கினார்கள்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கொமாண்டோக்களுடன் ஏற்பட்ட சண்டையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கும்படி கோரி பிரிட்டன், அமெரிக்கா மற்றும் நாடுகளுக்கு ஜோர்டான் அரசு விடுத்த உதவியை நிறுத்தும்படியும் அதற்கு அளிக்கும் உதவியை நிறுத்தும்படியும் கோரி குவெய்த்தில் 70,000 பேர் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கூட்டுறவுச் சங்கங்களில்

# மறு அறிவித்தல் வரை நியமனங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

கூட்டுறவுச் சங்கங்களில் எந்தவித பணியாளர்களையும் தற்போது நியமனம் செய்யக் கூடாதென வர்த்தக அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

கூட்டுறவு இயக்கம் புனரமைப்புச் செய்யப்பட விருப்பதால், புதிய நியமனங்களை இப்போது செய்ய வேண்டாம் என்றும், மறு அறிவித்தல் வரும்வரை நியமனங்களைப் பின் போடுமாறும் வர்த்தக அமைச்சர் சுற்றுநிருபம்மூலம் அறிவித்துள்ளார்.

வடபகுதி கூட்டுறவு ஆக்க ஆணையாளர் வடபகுதியைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், சமாசங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள அறிக்கைஒன்றிலும் இவ்வாறு கேட்டுள்ளார். (அம். நிரு)

கட்டைவேலி கி. ச,

# கம்யூனிஸ்ட் ஆதரவாளர் தலைவராகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

1966-ம் ஆண்டு கலைக்கப்பட்டுக் கடந்த நான்கு ஆண்டுகளாக விசேட ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த கட்டைவேலிக் கிராமசபையின் புதிய தலைவர் தெரிவு நேற்றுக்காலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அ. அ. யோசேப் தலைமையில் நடைபெற்றது.

புதியதலைவராக 4-ம் வட்டார உறுப்பினரும் கம்யூனிஸ்ட் ஆதரவாளருமான திரு. சிதம்பரப் பிள்ளை மாணிக்கம் 4 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

இரு தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்களும், தமிழரசு ஆதரவாளர்களும், கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களும் சேர்ந்த கூட்டணி மூலம் புதிய தலைவருக்கு ஆதரவு கிட்டியது.

உபதலைவராக 7-ம் வட்டார உறுப்பினரும், தமிழரசு ஆதரவாளருமான திரு கதிர்காமு மாணிக்கம்போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். (உடுப்-புலோ)

# அடையாள வேலைநிறுத்தம்

கோட்டை, ஞாயிறு

பதுளை கினகலைத் தோட்டத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையடுத்து 4 தோட்டத்தொழிலாளர் சங்கங்கள் செப்டம்பர் 28ம் திகதி அடையாள வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளன.

ஜனநாயக தொழிளாளர் காங்கிரஸ், சிறிலங்கா தோட்டத் தொழிலாளர் சங்கம், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்கள் நேற்றுமுன்தினம் மேற்படி துப்பாக்கிப்பிரயோக சம்பந்தமாக எதிர்ப்புக் கூட்டத்தை நடாத்தியுள்ளன.

# துணிகள் மலியும்

கோட்டை, ஞாயிறு

அடுத்தாண்டு முற்பகுதியிலிருந்து லங்கா சலுசலா ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதியைத் தடை செய்து பொதுமக்களுக்குத் தேவையான மற்றும் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளது.

அடுத்தாண்டு ஜனவரியிலிருந்து துணிவகைகளை இறக்குமதி செய்யும் ஏக போக உரிமையுடையதாக விருக்கும் சலுசலா சாதாரண மக்களுக்குத் தேவையான வெள்ளைபப்பிளின், வாயில் துணிகள் மற்றும் சீத்தைகள் முதலியவற்றையே பெருந்தொகையாக இறக்குமதி செய்யவிருக்கிறது. அடுத்தாண்டு 8 கோடி ரூபாவுக்கு துணிவகைகள் இறக்குமதி செய்ய சலுசலா திட்டமிட்டுள்ளது. துணிகளின் தற்போதைய விலைகளும் குறைக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படவிருக்கிறது.

படுகிறது.

சமீபத்தில் சௌக்கிய இலாகா எடுத்துள்ள புள்ளி விபரத்திலிருந்து இது தெரிய வந்துள்ளது. காசநோயால் பீடிக்கப்பட்ட ஒவ்வொரு 8 பேருக்கும் ஒருவர் வீதம் மரணமடைந்துள்ளதையும் இப்புள்ளி விபரங்கள் காட்டுபட்டு வருபவர்களின் தொகையைக் குறைக்க சுகாதார அமைச்சு காசநோய் தடுப்புநடவடிக்கைகளை விஸ்தரிக்க விருக்கிறது என சுகாதார அமைச்சைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் கூறினார்.

# மணிலா மாநாட்டில் உலக நாடுகளின் மேற்றிராணிகள்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

ஆசிய மேற்றிராணிமார்கள் மணிலாவில் நடாத்தவிருக்கும் சமய, சமூக அரசியல் சம்பந்தமான மகாநாட்டில் பரிசுத்த பாப்பும் கலந்துகொள்ளுகிறார் ஆசிய மக்களின் அபிவிருத்தி என்பதை கருவாகக்கொண்டிருக்கும் இம்மகாநாட்டில் பலதரப்பட்ட விடயங்கள் பற்றி ஆராயப்படும். ஆசிய மக்களின் சமூகப்பிரச்னைகள் பற்றி சீனமேற்றிராணியார் ஒருவரும், பொருளாதாரப் பிரச்னைபற்றி இலங்கைமேற்றிராணியார் ஒருவரும் அரசியல் பிரச்னை, கல்விப் பிரச்னை ஆகிய பல்கலைக் கழக மாணவர் நிலை, சமயக்கல்வியும் ஆசிய பண்பாடும், சமூகத் தொடர்பு சாதனங்கள் போன்ற விடயங்கள் பற்றி வியட்நாம், பாகிஸ்தான் ஜப்பான், இந்தியா பிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களைச்சேர்ந்த ஆயர்கள் உரையாற்றுவார்கள்.

மணிலாவில் நடைபெறும் இம்மகாநாட்டில் கொறியா, ஜப்பான், இந்தோனேஷியா லாவோஸ், கம்போடியா, மலாயா, தாய்லாந்து, வியட்நாம், தைவான், பசிபிக்தீவுகள், பிலிப்பைன்ஸ் தீவுகளைச் சேர்ந்த மேற்றிராணிமார்களும் பங்குபற்றுவார்கள்.

# ஆஸ்பத்திரிக் குழு பிரேரணைக்கு

## மானிப்பாய் ப. ச. ஆட்சேபம்

யாழ்ப்பாணம், திங்கள்

இணுவில், மானிப்பாய் ஆஸ்பத்திரிகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடாத்தவேண்டும் என்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சபையில் ஒரு பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பதாக பத்திரி செய்திகள் மூலம் அறிகிறோம். இப்படியான ஒரு பிரேரணையை சபை ஏற்கக் கூடாதென்று ஆஸ்பத்திரி சபையாரைக் கேட்டுக் கொள்ளுகின்றோம் என்று கோரும் தீர்மானம் ஒன்று மானிப்பாய் பட்டினசபை மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தலைவர் திரு. இராசேந்திரம், தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானத்தின் விபரம் வருமாறு:

''இணுவில், மானிப்பாய் ஆஸ்பத்திரிகள் நோயாளிகளின் வசதிக்கேற்ப சிறந்த முறையில் நடாத்தப்படுகின்றன. இலவச வைத்திய சேவையும் இங்கு நடைபெறுகிறது. இங்குள்ள வசதிகள் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கிடைப்பதில்லை. எனவே இந்தப் பிரேரணையை இச் சபை ஆட்சேபிக்கிறது.''

# இ. போ. ச. நேர அட்டவணை வேண்டும்

நல்லூர், ஞாயிறு

பருத்தித்துறையிலிருந்து புறப்படும் பஸ் வண்டிகளின் நேர அட்டவணை பிரதானமான ஒரு இடத்தில் பிரயாணிகளின் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும். இதேபோல நெல்லியடி வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும் பிரயாணிகளின் நன்மையைக்கருதி நேர அட்டவணை வைக்கப்பட வேண்டும் என்று உடுப்பிட்டி எம்பி. திரு ஜெயக்கொடி இ. போ. ச. தலைவருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

# நாளை கலைவண்ணம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினரால் அமைக்கப் படவிருக்கும் கட்டிடப் பூர்த்தி நிதிக்காக கலைவண்ணம் என்ற தலைப்பில் பாடசாலைகளின் கலைநிகழ்ச்சிகள் நாளை மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன

வாத்தியக்கோஷ்டி, நடனம்நாட்டியநாடகம்நாடகம் என்ற பிரிவில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளில் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் இந்துமகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, யாழ் மத்தியகல்லூரி என்பன பங்குகொள்கின்றன.

தனைப் பல்கலைக் கழகத்தார் இந்த 'இந்து சமயம்' பிரச்சனைக்குத் தெளிவானதோர் அறிக்கையைத், தமது முற்று முழுதான முடிபாக தெரிவிக்க வேண்டும். இதனால் மீண்டும் மீண்டும் இந்து சமயம் படித்து ஏமாறும் அப்பாவி மாணவர்களின் துயரைப் போக்க முடியும் தமிழ் எம். பி. மார்களும் சைவமதப் பாதுகாவலர்களும் இந்த 'இந்து சமய' பிரச்சனையில் பங்கெடுத்து இந்த வருடமாவது சில மாணவர்களுக்கேனும் பல்கலைக்கழகப் புகுமுக சந்தர்ப்பம் கிடைக்க ஆவன செய்தல் வேண்டும் என்பதே எமது அவா!

'ஒரு மாணவன்'

வெள்ளவத்தை.

# 500 பட்டதாரிகள் தேவை

நல்லூர், ஞாயிறு

8-ம் வகுப்பிற்குட்பட்ட பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பது விரும்பத்தக்கது. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு குறைந்தது 500 தமிழ்ப் பட்டதாரிகள் தேவைப்படுவர்.

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி கே. ஜெயக்கொடி கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் திரு ஜெயக்கொடி தமது கடிதத்தில் உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள ஆறு மகாவித்தியாலயங்களுக்கு உயர் வகுப்புகளிற் படிப்பிப்பதற்காக 19 பட்டதாரி ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுள்ளார்.

# வள்ளம் ஏலவிற்பனை

யாழ்ப்பாணம், திங்கள்

ஓர் இயந்திர வள்ளம் இம்மாதம் 24-ந் திகதி காலை ஊர்காவற்றுறை சுங்கக் காரியாலயத்தில் வைத்து ஏலத்தில் விற்கப் படவிருப்பதாக யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளர் அறிவித்துள்ளார்.

# கிராமசபைத் தேர்தல்

அம்பாறை, ஞாயிறு

அம்பாறை மாவட்டத்தைச்சேர்ந்த தீகமதுல வீரக்கொட கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப்பப் பத்திரங்கள் அம்பாறை தேர்தல் அதிகாரி திரு. லக்ஷ்மன் பெரேராவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கேரள மாநில கவர்னரைச் சந்தித்துப் பேசினர். இதன் பின்னர் உயர் தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

......

# மின்னணுக் கருவி விமானக்கடத்தலை தடுக்குமாம்

டெக்ஸாஸ், செப். 20

விமானக்கடத்தல் முயற்சிகளை முறியடிப்பதற்கு விமானக்கம்பனிகளுக்கு உதவக்கூடிய மின்னணுக் கருவியொன்றை டெக்ஸாஸ் நிறுவனம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறதாம். அலுமினிய சூட்கேஸ் ஒன்றினுள் துப்பாக்கியொன்று வைத்திருந்தாலும் இந்தக்கருவி காட்டிக்கொடுத்துவிடுமாம்.

# பூநகரியில் கலைவிழா

பூநகரி, ஞாயிறு

பூநகரியில் இம் மாத இறுதியில் கலைவிழா ஒன்று நடைபெற இருக்கிறது இதற்கான ஏற்பாடுகளில் பூநகரி காரியாதிகாரி திரு. ஜி கிருஷ்ணமூர்த்திதலைமையிலான பூநகரி நவயுக இளைஞர் ஒன்றியம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

பூநகரி மகாவித்தியாலய மைதானத்தில் இரண்டு நாட்கள் நடைபெறும் இவ் விழாவில் முதல் நாள் நிகழ்ச்சியில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இரண்டாம் நாள் நாடக மன்றங்களின் நிகழ்ச்சிகளும் இடம் பெறும் போட்டி ரீதியில் நடைபெறும் இன் நிகழ்ச்சிகளுக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

முதல் நாள் நிகழ்ச்சிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும்.

......

# 'கி. சபைக்கு சொந்தமாக்குக'

முசலி, ஞாயிறு

இலுப்பைக்கடவை கிராமசபைக்குட்பட்ட வெள்ளாம் குளம் சுற்றுலா, வீட்டு நிலத்தையும் வளவையும் தங்கள் கிராமச் சபைக்கு உரிமையாக்க வேண்டுமென்று இலுப்பைக் கடவை கிராமச்சபைத் தலைவர் திரு. வி. கைலாயபிள்ளை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரை கேட்டுக்கொண்டுள்ளார்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org